www.tamilarangam.net

# பயணம்

கடல் கடந்த
கலைப்பயணம்

நதி 1
அலை 3
1999





D50236
Mr. Manohasan S
210 av du 8 mai 1945(esc:E13)
Blanc-Mesnil 93150
France
140

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்மை செய்து நன்றி கூறி நட்பை வளர்க்கும்

# இரங்கும் இல்லம்



### திட்டங்கள்

- ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் நுழைவதற்கான சகல ஆலோசனைகளையும் வழங்கி முடிந்தவரை முயற்சித்து ஜேர்மனிக்கு அழைத்தல்
- இயல், இசை, நாடகம் இத்துறைகளில் சிறந்த கலைஞர்களுக்கு '**கலைப் பவளம்**' எனும் விருதும் பொற்கிழியும் வழங்கல்
- பயணம் சஞ்சிகை மூலம் உலகெங்கும் சிதறிப் பரந்து வாழும் ஆற்றல் கொண்ட தமிழர்களின் திறமையான ஆர்வத்தை பிறர் அறியும் வண்ணம் வெளிப்படுத்துதல்
- தாயக உறவுகளுக்கு உரிமையுடன் உதவுதல்

## எண்ணங்களை எமக்கு எழுதுங்கள்



இனிய வாசகர்களே . . .

பயணத்தின் சென்ற இதழ் குறித்து ஏராளமான கருத்துக்களும் விமர்சனங்களும் எங்களை வந்து சேர்ந்தன. அனைவருக்கும் எங்கள் நன்றி!

பல வாசக அன்பர்கள் தொலைபேசி மூலம் தங்களின் கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டார்கள். எண்ணங்களை எங்களுக்கு எழுத்துருவில் அளித்தால் நலமாயிருக்குமென்று வேண்டுகிறோம்.

தொடர்ந்து உங்களின் ஆதரவும் உற்சாகமும் பயணத்திற்கு வெற்றிக்கிரீடம் சூட்டும்.

ஆசிரியர்

www.tamilarangam.net


**பயணம்**

கடல்
கடந்த
கலைப்பயணம்



தபால் தொடர்புகளுக்கு
**PAYANAM**
P.O.Box 750 162
60531 Frankfurt
**Germany**

Tel : 0049 69 694 577
Fax: 0049 69 694 442
E-mail:
Payanam@sympathy.org
Home page:
www.Sympathy.org



**தனிப்பிரதி:**
**இந்தியாவில் 5.00 ரூபா**
**இலங்கையில் 10.00 ரூபா**

**இதரநாடுகளில்**
**தபால்செலவு**
**உட்பட**
**சந்தா விபரம்**

**12**
**பயணம் வெளியீடுகள்**
**66.00**
**ஜேர்மன் மார்க்குகள்**

அல்லது

**இம்மார்க்குகளுக்குச்**
**சமமான மற்றைய**
**நாட்டு நாணயங்கள்**

**இது இரங்கும் இல்லத்தினால்**
**வெளியிடப்படும் கலைஞர்கள்**
**பொதுப்பணியாளர்கள்**
**பற்றிய சஞ்சிகை**

**ஆசிரியர்:**
**ஸ்ரீபதி சிவனடியான்**


# பயணம் தொடர்கிறது...

அந்தந்தக் காலத்தில் அவரவர்களாலான
கடமையான நன்மையைச்
செய்வதுதான் மனித அறமாகும்!
அந்த வழியில் செல்கின்றேன்
அவ்வளவுதான்!
திருவள்ளுவர் கூறியதைவிட வேறு என்ன
அறிவுரை கூறிவிட முடியும் என்று
யாரும் நீதி நூல்களை
எழுதாமல் இருக்கவில்லையா?
காந்தியடிகள் மிகமிகக் கஷ்டப்பட்டார்
என்பதற்காக அவருக்குப் பிறகு யாரும்
பொதுத் தொண்டில் ஈடுபடாமல் இல்லையா?
இப்பணியில் துன்பம் வரும் என்று
தெரிந்தேதான் பொதுப் பணிக்காக
இந்தப் 'பயணத்தை' தேர்ந்து கொண்டேன்!
இப்படி செயல்படுவது நல்லதென்று
பலருக்கும் கூறுவேன். நல்ல
மனமுள்ளவர்கள் உடனே உதவ
முடியாவிட்டாலும் சிந்திப்பார்கள்...
நாளடைவில் இத்தகைய மனங்களெல்லாம்
விரைவில் ஒன்றுகூடி உதவுவார்கள்
என்பது எனது அசைக்க முடியாத
நம்பிக்கை!

ஆசிரியர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரத்து இருநூறு வருடங்களைத் தாண்டிய பிராங்பேர்ட் நகரத்தில் கிட்டத்தட்ட ஆறரை இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இதில் 29 சதவிதமானவர்கள் அதாவது இரண்டு இலட்சம் பேர் வெளிநாட்டவர்கள். இம்மாநகரம் அகில உலகுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வங்கி வசதியையும், சர்வதேச விமான நிலையம், உலக வாணிபச் சந்தை மையம், பங்கு மாற்றுச் சந்தை போன்ற வற்றையும் தன்னகத்தே கொண்டு பல்வேறு நாட்டு மக்களையும் அவரவர் கலாச்சாரத் தையும் பேணி நடந்து கொள்கிறது.



# பிராங்பேர்ட்டின் வரப்பிரசாதம்

அதுமட்டுமல்லாமல் ஜேர்மனி யின் புதிய தலைநகரம் **பேர்லின்**, பழைய தலைநகரம் **பொண்**, பிரமாண்டமான துறைமுகம் கொண்ட நகரம் **கம்போர்க்**, பெரும் கலாச்சாரத்தை உள்ளடக்கிய நகரம் **முன்சென்**, இப்படி எத்தனையோ பல மாநகரங்கள் இருந்தும் பிராங் பேர்ட்டில்மட்டுமே பல்வேறு நாட்டு மக்களுக்காக அரசாங்க காரியாலயம் ஒன்று கடந்த 10 வருடங்களாக எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் 1989 - லிருந்து சேவை செய்து வருகின்றது. பல கலாச்சார அமைப்பின் இக்காரியாலயம் (Department of Multicultural Affairs ) வெளிநாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று கூறுவதுடன் ஜேர்மனியின் மற்றைய நகரங் களில் இத்தகைய காரியாலயங்கள் அமைக்கப்படாதது வெளிநாட்டவர்களின் துரதிர்ஷ்டமென்றே கூறலாம். இந்தக் காரியாலயமானது பிராங்பேர்ட் மா நகர சபையின் ஓர் அங்கமாக இருந்து வெளிநாட்டவர்களின் உணர்வுகளைப் புரிந்து, உரிமைகள் அளித்து, உதவி புரிந்து வருகிறது. அத்துடன் அவ ரவர் சமூகத் தினரிடம் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், கலை



முகிலைத் தழுவும் உயர்ந்த கட்டிடங்கள்
பின்னணியில் திருமதி. ஸ்ரீபதி, மகள் சசி, மருமகன் சாளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சாரங்களை வளர்க்கவும் பேருதவி புரிகின்றது. வெளிநாடுகளிலிருந்து குடியேறிய மக்கள், பல வருடங்கள் வாழ அனுமதி பெற்றவர்கள், புதிதாக வந்தவர்கள் ஆகியோருக்கு ஜேர்மனிய மக்கள் நல்ல பங்களிப்பைச் செய்வதால் இம்மாநகரத்தின் செழிப்பு மேலோங்குகிறது. இப்பங்களிப்பு மிகச் சுதந்திரமாகக் கிடைக்காவிட்டாலும், முன்னைய காலத்தைவிட எவ்வளவோ இலகுவாக பல நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன.



நதியின் இருகரைகளிலும், குறுக்கே உள்ள மூன்று பாலங்களிலும் கலைக் கூடங்களும், உணவுச்சாலைகளும்

இக்காரியாலயத்தில் ஜேர்மனியர்கள், ஜேர்மனியரல்லாதவர்கள் இருபகுதியினரதும் பிரச்சினைகள், கருத்துக்கள் ஆகியவற்றை செவிமடுத்து செயல்படுகின்றனர். அந்த வகையில் இம்மாநகரத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பல்வேறு சமூக அமைப்புகளின் நிர்வாகிகளை வரவழைத்து அவரவர் சமூகத்தினரிடையே நிகழும் ஒற்றுமையின்மை, வேறு பிரச்சினைகள் போன்றவற்றை எப்படி எந்த வகையில் நிவர்த்தி செய்யலாம், யார் யாரை அணுகி எவ்வாறு ஆலோசனைகளைப் பெறலாம் போன்ற அறிவுரைகளை வழங்குகிறார்கள்.

இந்த வரவழைப்பில் தமிழினத்தின் மூன்று பெரிய அமைப்புகள் அழைக்கப்பட்டிருந்தார்கள். பிராங்பேர்ட் தமிழாலயம், பிராங்பேர்ட் தமிழ் மன்றம், பிராங்பேர்ட் இரங்கும் இல்லம் ஆகியவையே அவை. இந்த அமைப்புகளில் 1988-இல் தமிழ் மன்றமும், 1999 - இல் இரங்கும் இல்லமும் பயணம் இதழின் ஆசிரியர் திரு.ஸ்ரீபதி சிவனடியான் அவர்களால் ஆரம்பித்து அத்திவாரமிடப்பட்டு வளர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இனிய வாசகர்களே . . .**

**இந்நிகழ்ச்சியைப்போல் உங்கள் நாடுகளில் உங்கள் பகுதிகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை எழுதி அனுப்புங்கள். பயணம் மூலமாக உலகெங்கிலுமுள்ள தமிழ் மக்களுடன் உங்கள் மகிழ்ச்சியினைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

முதலாவது பயிற்சி வகுப்பு மே மாதம் 8, 9 திகதிகளிலும், இரண்டாவது வகுப்பு 29, 30 திகதிகளிலும் நடைபெற்றன. வெவ்வேறான அமைப்புகளிலிருந்து 20 பேர் வரை கலந்து கொண்டார்கள். சகல விரிவுரைகளும் ஜேர்மன் மொழியிலேயே நடைபெற்றன. ஜேர்மன் மொழியைப் பேச, விளங்கத் தெரியாதவர்கள் விரிவுரையின் போது சகலவற்றையும் விளங்கிக் கொள்ள முடியாமல் அவதிப்பட்டதையும், தவறாக விளங்கிக் கொண்டு சம்பந்தமில்லாமல் பதில்கள் அளித்ததையும் தவிர்த்திருக்க மொழிபெயர்ப்பாளர்களுடன் வருகை தந்திருக்கலாம் அல்லது தங்கள் அமைப்பிலிருந்து தங்குதடையின்றி ஜேர்மன் மொழி பேசக்கூடியவரை அந்தப் பெறுமதியான விரிவுரையைக் கேட்டு விளங்கிக் கொள்ள அனுப்பியிருக்கலாம்.

தொடர்ந்தும் ஒக்றோபர் மாதம் 11 -ஆம் திகதியிலிருந்து 14-ஆம் திகதிவரை விரிவுரைகளிலும், பயிற்சி வகுப்புகளிலும் பங்கேற்க பலர் ஜேர்மனிய நகரப் பாதுகாவலர் பள்ளிக்கு (Police School) அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 5 நாட்களிலும் ஆகும் உணவுச் செலவை இந்தக் காரியாலயமே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பார்வையாளர்களில் ஒரு பகுதியினர். கூட்டத்தின் நடுவே பலகலாச்சார அமைப்பின் தலைவி திருமதி. றோசி வொல்வ் அல்மானாஸ்றே

பொறுப்பேற்பதுடன், அப் பள்ளியில் உள்ள இரவு விடுதியில் தங்குவதற்கு ஒழுங்கும் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பயிற்சியில் பங்கு பற்றும் பலர் தம் நாடுகளில் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து, வெவ்வேறு காரணங்களினால் ஜேர்மனிக்கு வருகை தந்து இன்று ஜேர்மனிய நகர பாதுகாவலர் பள்ளியில் படிப்பதற்கும், அப்பள்ளி விடுதியில் தங்குவதற்கும் கிட்டிய வாய்ப்பு கனவிலே கூட கண்டிருக்கமுடியாதது ஆகும். அவர்களின் உணர்வைப் புரிந்து உரிமையளித்து, உதவி புரியும் பல கலாச்சார அமைப்புக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

*1988 - இல் தமிழ் மன்றமும்,*
*1990 - இல் இரங்கும் இல்லமும்*
*ஸ்ரீபதி சிவனடியாரால்*
*அத்திவாரமிட்டு வளர்க்கப்பட்டது.*

இதே அமைப்பு ஆகஸ்ட் மாதம் 13, 14, 15 - ஆம் திகதிகளில் பிராங்பேர்ட்டின் மயின் (Main) நதிக்கரையில் பல நாட்டவர்களும் கலந்து கொள்ளும் வகையில், ஒவ்வொரு நாட்டவர்க்கும் சிறிய கூடாரங்கள் அமைத்து, அவரவர் நாட்டு கலை நடனங்களையும், இசைப்பாடல்களையும் மேடை ஏற்றியதோடு மட்டுமல்லாமல் விதவிதமான வெவ்வேறு நாட்டு உணவு வகைகளையும் அளித்து மக்களை மனமகிழ்வித்தது.

உலகத் தமிழர் இயக்கத்தால் தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்காட்டும் வகையில் அழகிய நாட்டிய நடனம் மேடையேற்றப்பட்டது. இது குறித்து அடுத்த இதழில் பார்ப்போமா?

● சசிவா

பயிற்சி வகுப்பில் பல அமைப்புகளின் நிர்வாகிகள் . . .






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பதிப்பாளரின் அனுபவங்கள்



ஜெனீவாவில் மணிமேகலைப் பிரசுர புத்தகக் கண்காட்சியில் (இடமிருந்து வலமாக) சுவிஸ் கல்லாறு சதீஷ், யுஎன்ஐ தம்பிராஜா, கவிஞர் சுபாஷ், ஜார்ச் சபேஸ்ரியன், ரவி தமிழ்வாணன், ஆறுமுகம் கந்தையா, பாலா, ஜெனீவா சஞ்சிகை ஆசிரியர் பார்த்திபன்

**தனது ஐரோப்பிய பயணத்தின் அனுபவங்களை இந்த இதழிலிருந்து நம்முடன் பகிர்ந்துகொள்கிறார் ரவி தமிழ்வாணன்...**

எங்கள் மணிமேகலைப் பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சியை புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே நடத்த விரும்பி சென்னையிலிருந்து நானும் விற்பனை ஒருங்கிணைப்புப் பொறுப்பை மேற் கொண்ட திருமதி. கமலாவும் பயணமா னோம். பிப்ரவரியிலிருந்து நான்கு மாதங்களாக முயற்சிகள் மேற்கொண்டே வந்தேன். இலங்கையைச் சார்ந்தவரும், சென்ற ஆண்டின் சிறந்த அறிவியல் நூலுக்காக 'விண்வெளியில் வீரகாவியம்' என்ற தன் நூலுக்கான தமிழக அரசின் பரிசை முதல்வர் திரு. கருணாநிதியிடம் பெற்றவருமான டாக்டர் திரு. இந்திர குமார் எங்களின் பயணத்தில் தன் குடும்பத் துடன் வருவதெனத் திட்டமிட்டிருந்ததால் நேராக லண்டன் சென்றோம். சென்னை யில் உள்ள நார்வே தூதரகத்தில் விஸா கொடுப்பதற்கு பத்து தினங்களுக்கு மேல் ஆகும் எனத் தெரிவித்ததால் லண்டனில் முயற்சிகள் மேற்கொள்ளத் திட்டமிட்டேன்.

சென்னை மீனம்பாக்கத்தில்தான் கன் வேயர் பெல்ட்டில் பெட்டிகள் வருவ தற்குத் தாமதம் ஆகும் என எண்ணிக் கொண்டிருந்த எனக்கு ஹீத்ரூ விமான நிலையத்தில் 40 நிமிடங்கள் நின்றதில் ஆச்சரியம். மிகவும் கஷ்டமான காரியம் என எண்ணி நார்வே தூதரகத்தை அடைந்த போது அங்கிருந்த பெண்மணி

டாக்டர் இந்திரா குமாரசாமி, கௌரவ டாக்டர் விஜயாம்பிகை இந்திரகுமார்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



செல்வி வினோதிகா இந்திரகுமார், தேவி றோய், செல்வி கமலா, ரவி தமிழ்வாணன், டாக்டர் விஜயாம்பிகை இந்திரகுமார், டாக்டர் இந்திரகுமார், 'பயணம்' ஆசிரியர் ஸ்ரீபதி சிவனடியான்

[redacted]

எங்களின் பாஸ்போர்ட்டைப் பார்த்துவிட்டு அதில் இருந்த ஷெங்கன் விசா முதலில் கண்ணில் பட என்னை ஏறிட்டுப் பார்த்தாள். வாசகர்கள் அறிந்ததைப் போல இந்த ஷெங்கன் விசா இருந்தால் ஜெர்மனி, பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க் போன்ற பத்து நாடுகளுக்கு ஒரு சேர செல்லும் வாய்ப்பு ஏற்படும். இது போக என் பாஸ்போர்ட்டில் சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், மலேசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கான விசாக்கள் இருந்ததைப் பார்த்துவிட்டு 'உங்களின் இரண்டு போட்டோக்கள் தேவை!' என ஆங்கிலத்தில் சொன்னார். இப்படி உடனே தேவைப்படும் என நான் எதிர்பார்க்கவே இல்லை. எனவே டாக்டர். இந்திரகுமார் அவர்களின் வீட்டிலிருந்து போட்டோக்களைத் தயாராக எடுத்துச் செல்லவில்லை. அங்கிருந்து கிரீன் பார்க் இரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ஆட்டோமேடிக் போட்டோ பாக்ஸிற்கு அவசரமாகச் சென்றேன்.

இரண்டரை பவுண்ட் காசை அந்த இயந்திரத்தில் அழுத்திவிட்டு உட்கார்ந்து கொண்டேன். மூன்று முறை விளக்குகள் பளிச்சிட்டன. சரி, முடிந்துவிட்டது என எழுந்திருக்க முயற்சித்த போது இன்னொருமுறை ப்ளாஷ் அடித்தது. சந்தேகத்திற்கு சாம்பாராக நான்காவது போட்டோ. அதில் என் வாயும் கழுத்தும் மட்டும்.

லண்டனிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்கு ஈரோ ரயிலில் சென்றோம். விமானத்தில் செல்லும் போது என்னென்ன நடைமுறைகள் உண்டோ அதெல்லாம் இங்கும் உண்டு. இங்கிலாந்தையும் பிரான்சையும் பிரிக்கும் ஆங்கிலக் கால்வாயைக் குடைந்து குகைப் பாதையில் ரயில் செல்வதற்கு வசதி செய்திருக்கிறார்கள் இதனைக் கடக்க 25 நிமிடங்கள் ஆகின்றன. 150 மைல் வேகத்தில் ரயில் செல்வதால் மொத்தப் பயணமே மூன்று மணிநேரம்தான்!

பாரிசில் கார்டினார் ரயில்வே ஸ்டேஷனில் பொருட்களை வைக்கும் டிராலியை எடுக்க ஒரு காசு வைத்து அழுத்த வேண்டும். அந்தக் காசு பிரெஞ்சுப் பிராங்க்காகவும் இருக்கலாம். லண்டன் காசாகவும் இருக்கலாம். பயன்படுத்திய பிறகு உரிய இடத்தில் நிறுத்தினால் இந்தக் காசைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற தகவல் புதுமையானது.

ஜெர்மனியில் பிராங்க்பர்ட்டில் பயணம் இதழின் ஆசிரியர் திரு. ஸ்ரீபதி சிவனடியான் எங்களை வரவேற்று நன்கு உபசரித்தார். திருமதி. பகவதி என்கிற இலங்கைப் பெண்மணி ஒரு ஜெர்மானியரைத் திருமணம் செய்துகொண்டு வாழ்ந்து வருகிறார். பழைய தமிழ்ப் பாடல்களை அருமையாகப் பாடினார். இவர் மகனும் ஜெர்மானியப் பாடல் ஒன்றை ஈடுபாட்டுடன் முக உணர்ச்சிகளுடன் நன்கு பாடினான். திரு. ஸ்ரீபதி கருத்துள்ள பாடலைச் சிறப்பாகப் பாடினார். ''காக்கைகளுக்கும் குருவிகளுக்கும் கூடுகள் உள்ளன. வாழத் தாய்நாடு இல்லாமல் நாம் இங்கு வந்திருக்கிறோமே'' என்ற அர்த்தத்தில் சோகமான பாடல்அது. என் பங்கிற்கு நானும் பாடினேன். வித்தியாசமான அனுபவம் இது.

அடுத்தநாள் பிராங்க்பர்ட் டவரில் சுழலும் ஹோட்டலுக்கு திரு. ஸ்ரீபதி தன் நெடுநாளைய நண்பரான திரு. குமாரசாமியையும் அவர் மனைவி டாக்டர்

www.tamilarangam.net

# தொலைந்த தொடர்புகளைத் தொடுப்போம்



**நம் நாட்டில் நடந்து கொண்டிருக்கும் நயவஞ்சக இன ஒழிப்பால் லட்சக் கணக்கான மக்கள் உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோரின் தொடர்புகள் தொலைந்து, ஒருவரை ஒருவர் பல வருடங்களாகக் காணாமல் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களைத் தொடுத்து வைக்க இப்பணி உதவட்டும்.**

**இதேபோன்று நீங்களும் பயணம் மூலம் தொலைந்த தொடர்புகளைத் தொடுக்கலாம்.**

**இங்கே தேடப்படுபவர்களை, உங்களுக்குத் தெரிந்தால் தொடர்பு கொள்ளுங்கள்.**

**தேடுபவர்:**
**கரம்பொன் கிழக்கு ரஞ்சன் கண்ணுத்துரை**
**வாழும் இடம்: லண்டன் (ROMFORD)**

**தேடப்படுபவர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திசபாலன் | விமலன் | ஜெகதீஸ்வரன் |
| பிறந்தஇடம்: | முல்லைத்தீவு | நல்லூர் | வவுனியா |
| வயது: | 48-50 | 52-53 | 48-49 |
| வாழும்இடம்: | அவுஸ்திரேலியா | மிடில்சஸ்ற் | அவுஸ்திரேலியா |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமதி. இந்திராவையும் அழைத்திருந்தார். இவர்கள் பொள்ளாச்சியைச் சேர்ந்தவர்கள். கடந்த 30 வருடங்களாக பிராங்பர்டில் வசிக்கிறார்கள். திரு குமாரசாமி மிகுந்த நகைச்சுவை உணர்வு உடையவர். தான் சிரிக்காமலேயே மற்றவர்களை சிரிக்க வைக்கும் ஆற்றலுடையவர்.

திரு. ஸ்ரீபதியின் தங்கை திருமதி. தேவி வீட்டில் மதிய உணவு. அசைவ உணவு வகைகளை அருமையாகச் சமைத்திருந்தார். நண்டு உட்பட அனைத்தையும் ஒரு பிடி பிடித்தோம். இங்கேயும் ஒரு மினி பாட்டுக் கச்சேரி. டாக்டர். திருமதி. இந்திரா பாடல்களை அற்புதமாகப் பாடினார். அது இனிய மாலைப் பொழுதாகக் கழிந்தது. திரு. ஸ்ரீபதியின் மாமியாருக்கு 75ஆம் வயது பூர்த்தியாவதை முன்னிட்டு பெரிய அளவில் பிறந்த நாள் விழா நடைபெறுகிற தினமாக இருந்த போதிலும்கூட முழுநாளையும் எங்களுடன் அவர் செலவழித்ததை மறக்க இயலாது. அவருடைய வீட்டைப் போலவே மனதும் ரொம்ப விசாலமானது.

பிரியா விடைபெற்று ஜெர்மனியின் மற்றொரு நகரான ஹம்மிற்குச் சென்றோம். அங்கு கடந்த 18 வருடங்களாக ஜாப்னா ஸ்டோர்ஸ் என்ற பலசரக்குக் கடையை நடத்தி வரும் திரு. துரைசிங்கம்தான் புத்தகக் கண்காட்சிக்கு ஏற்பாடுகளை செய்து ஒழுங்குபடுத்தித் தந்து உதவியவர். என் வட்டாரத்தில் நான் உயரமானவன் என்று பெயர். என்னைவிட ஆஜானுபாகுவான இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் இரண்டு: கடுமையான உழைப்பு, உணவளித்து உபசரிப்பு.

நெதர்லாண்ட்ஸில் வெஹனிகர் என்ற ஊரில் புத்தகக் கண்காட்சியை நடத்த உதவியவர் திரு. சௌந்தர். இந்த ஊரின் மையத்தில் உள்ள மண்டலத்தில் நடந்த விழாவில் கவிஞர்கள் கலந்து கொண்ட 'புலம் பெயர்ந்த வாழ்வு' என்னும் தலைப்பில் கவியரங்கம் நடந்தது. திரு நடராஜு கண்ணப்புவின் ஆவேசமான ஓரங்க நாடகம் நடைபெற்றது. டாக்டர் இந்திரகுமாரின் மகள் வினோதினியின் பரதநாட்டிய நடனம் நடைபெற்றது.

நெதர்லாண்டிற்குப் பெரும்பாலும் எழுத்தாளர்கள்; பத்திரிகையாளர்கள் வருவது அபூர்வம் என்ற வகையில் எங்களின் புத்தகக் கண்காட்சிக்கும் நிகழ்ச்சிக்கும் நல்ல வரவேற்பும் கவனிப்பும் இருந்தது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 100 பேருக்கும் ஏழு வகைகளுடன் கூடிய சாப்பாடு பரிமாறினார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!



குமாரசாமி, ரவி தமிழ்வாணன், செல்வி கமலா

பயணம் தொடர்கிறது.... நார்வே, ஸ்வீடன், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருக்கிறோம். இந்த அனுபவங்களைப் பற்றி அடுத்த இதழில் சொல்கிறேனே!... ●


பாரிஸ் லா ஷப்பலில்
மருந்தோடு விருந்துண்டு மகிழ



றோயல்
உணவகம்

58, Rue Louis Blanc,
75010 Paris.

Tel : 01 40 36 41 21
Mo : La chapelle




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறவுகளுக்கு உரிமையுடன் உதவுவோம்!

எமது மக்களுக்கு போர் தந்த இழப்புகள்தாம் எத்தனை எத்தனை! இழந்துபோன வாழ்க்கையையும், மறைந்து போன உறவுகளையும், அறுந்துபோன சொந்தங்களையும் யாரால் திருப்பி அளிக்க முடியும்?

போரின் கொடிய கரங்களில் அகப்பட்டு முகவரி சிதைந்து போன நம்மவர்கள் எத்தனை ஆயிரம் பேர்? அத்தியாவசியத் தேவைகளுக்கே வழியின்றி தெருவோரங்களில், உழலும் தமிழ் நெஞ்சங்களை மறந்து போக முடியுமா நம்மால்?

வாழ்வு தேடி ஏங்கி நிற்கும் எண்ணற்ற தாய்மார்கள், வயோதிகர்கள், சிறார்களின் மீது பரிவு கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தான் உணவு, உடை, மருந்து என்று பலவிதங்களிலும் உதவி வருகிறது. அதன் சேவை விரிவடைகையில் தேவையும் விரிவடைகிறது. அதற்கு உதவுவது நம் கடமை அல்லவா?

இங்குள்ள மாதாந்திர வங்கிப் பணம் பரிமாற்றுப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பி உதவி புரிய புனர்வாழ்வுக் கழகத்தினர் வேண்டுகிறார்கள். பத்து பவுண்களுக்கேனும் குறையாத ஒரு தொகையை நீங்கள் இவர்கட்கு வழங்கினால் அவசர உதவி நாடி நிற்கும் நம் உறவுகளுக்கு விரைவான சேவையை வழங்க முடியும்.

நமையன்றி யார் உதவக்கூடும்? உறவுகளே ஒதுங்கிப் போனால் உலகத்தினர் உதவுவாரா?



## Tamils Rehabilitation Organisation (TRO)

79 Hoe Street, Walthamstow, London E17 4SA, England

Tel.: 00441 81 520 5876 Registered Charity No.: 10 00 29

Barclays Bank PLC. Walthamstow Branch,

Hoe Street, London E17, United Kingdom

**Account No: 00802662 Sort code No: 20-53-00**

### STANDING ORDER

To: The Manager,

Please make monthly transfers on the same day to each month to TRO ´s account No. Until this order is cancelled by me/us.

Name:..........................................................Address:..........................................................................................

..........................................................................Signature..................................................Date......................

Please debit my /our Account No...........................Amount of.............In words(.................................).

**மேல் படிவத்தை நிரப்பி கையொப்பமிட்டு தங்களின் வங்கியில் கொடுப்பதன் மூலம் ஒரு நிரந்தரமான மகத்தான பணிக்கு பேருதவி புரிகின்றீர்கள். நன்றி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அந்நிய நாட்டில் அரிய சந்தர்ப்பத்தை அடையத் தவறாதவர்கள்

**அளவற்ற சந்தர்ப்பங்களை அளிக்கும் நாடான அமெரிக்காவில் 10 மாதங்கள் வரை ஆங்கில மொழி, கற்கவும், அமெரிக்கா கலாச்சாரம், வாழ்க்கை முறை ஆகியவற்றைக் தெரிந்து கொள்ளவும் ஜெர்மனியிலிருந்து பல உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் அங்கு செல்கிறார்கள்.**

# அமெரிக்கா



பெற்றோருடன் அருண் குமாரசாமி.

ஜெர்மனியிலிருந்து செல்லும் மாணவர்கள் பத்து அல்லது பதினோராம் வகுப்பு முடித்து விட்டு அமெரிக்காவிற்கு மாற்று மாணவர்களாக (Exchange Students) செல்கிறார்கள். இதில் சிலர் 3 மாதங்கள் வரையிலும், சிலர் 6 மாதங்கள் வரையிலும் இன்னும் சிலர் 10 மாதங்கள் வரையிலும் அங்கு படிக்கச் செல்கிறார்கள். அங்கு செல்லும் மாணவர்கள் அமெரிக்க உயர் நிலைப் பள்ளிகளில் முழு நேர மாணவராகப் பள்ளிக்குச் செல்கின்றனர். காலை 7.45 மணியிலிருந்து பிற்பகல் சுமார் 3 மணி வரை பள்ளியில் வகுப்புகள் நடை பெறும். எல்லாப் பாடங்களும் ஆங்கி லத்தில்தான் நடத்தப்படும். அமெரிக்கா சென்று திரும்பும் மாணவர்கள், குறுகிய காலத்திலேயே மிக அருமையாக அமெரிக்க ஆங்கிலம் பேசுவதுடன், இவர்களிடம் ஒரு தன்னம்பிக்கை நிறைந்த செயற்பாட்டையும், மற்றவர்களை நம்பிக் காத்திருக்காமல் பல வேலைகளைத் தாங்களாகவே செய்து முடிக்கும் மனத்திறனையும் காணமுடிகிறது.

இவ்வாறு அமெரிக்காவில் பயின்று ஜெர்மனிக்குத் திரும்பி ஜெர்மன் பல்கலைக்கழகத்தில் நேரடியாகச் சேர்ந்து மருத்துவம் பயின்று இன்னும் ஒரு ஆண்டில் டாக்டர் பட்டம் பெற இருக்கும் வித்தியா குமாரசாமி, Graduction ஐ (12ஆம் வகுப்பு) வெற்றிகரமாக முடித்து ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் நேரடியாகச் சேரக் காத்திருக்கும் அருண் குமாரசாமி இவர்களை நாம் இங்கு குறிப்பிட வேண்டும். அருணுக்கு பொறியியல் துறையில் கல்வி பயில அனுமதி கிடைத்துள்ளது.

அமெரிக்கப் பள்ளிக்கு சென்றவுடன் எளிதில் கிராஜுவேஷன் (Graduation) வகுப்பு சேர விரும்புபவர்கள் அதற்காக என்னென்ன பாடங்கள் எடுத்துப் படிக்க வேண்டும் என்பதையும், மேலும் அந்தப் பள்ளிப் பொறுப்பாளரிடம் (Graduation) செய்வதற்கான அனுமதியும் பெற்றுகொள்ள வேண்டும். அத்துடன் அங்கு (Advance Placement) என்ற தேர்வில் பாடங்களில் தேர்வு பெற வேண்டும். பல்கலைக் கழகங்களில் எந்தப் பிரிவிற்கு (உதாரணமாக மருத்துவம், பொறியியல்) என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடங்கள் எடுத்துப் படிக்க வேண்டும். என்பது இங்கு பல்கலைக் கழக அறிவிப்பு இதழ்களில் விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் குறைந்த பட்சம் Grade 3 பெற்றிருக்க வேண்டும். அல்லது SAT என்ற தேர்வில் குறைந்தது 1300 புள்ளிகள் எடுத்திருக்க வேண்டும்.

அமெரிக்க உயர்நிலைப் பள்ளிகளை ஜெர்மன் உயர்நிலை பள்ளிகளோடு ஒப்பிட்டு செய்துகொள்ளலாம்.

நான் சென்றிருந்த பள்ளியில் - சிகாகோவுக்கு அருகாமையில் உள்ள Glendbard South High School நிறையப் பாடங்களில் இந்திய மாணவர்களே முதலிடம் வகிக்கிறார்கள் என்றார் அருண் பெருமிதத்துடன்.

மாற்று மாணவர்களாக அமெரிக்காவில் பயில வந்திருந்த ஜேர்மன் மாணவர்களில் யாருமே செய்யத் துணியாத கிராஜுவேஷன் தேர்வினையும் மற்றும் 4AP தேர்வுகளையும் எழுதி அதிக மதிப்பெண்களில் தேர்வு

# அழைக்கிறது



தாயார் இந்திரா குமாரசாமியுடன்வித்தியா, அருண்



மாணவ நண்பர்களுடன் அருண் குமாரசாமி

கூற முடியுமா என்ற கேள்விக்கு அருண் குமாரசாமி விடையளித்தார். ''அங்கு பயிலும் மாணவர்கள் பலவிதமான முறைகளில் ஆசிரியர்களாலும், பள்ளிகளின் சட்டதிட்டங்களாலும் மிகவும் ஊக்குவிக்கப் படுகின்றனர். அங்குள்ள மாணவர்களுக்குள் வெள்ளையர் கறுப்பர் - வேறு நிறத்தினர் என்ற இன வித்தியாசம் பார்த்து ஊக்குவிக்கப்படுவதில்லை. மிக நன்கு படிக்கும் மாணவர்களின் புகைப் படங்கள், பெயர்களை பள்ளிகளின் முகவாயிலில் விபரமாக குறிப்பிட்டு ஊக்கப் படுத்துகிறார்கள்.

ஒழுக்க முறைகள் மிகவும் தீவிரமாகக் கடைபிடிக்கப்படுகின்றன.

ஆசிரியர்களிடம் மாணவர்கள் எப்போது வேண்டுமென்றாலும் சந்தேகங்களை நிவர்த்தி பெற்ற அருண் மற்ற மாணவர்களுக்கு ஒரு முன்னுதாரணம் என்று அருணின் தந்தையார் திரு. குமாரசாமியிடம் பள்ளியின் முதல்வர் மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

Exchange Student (மாற்று மாணவர்) ஆக அமெரிக்கா செல்வது எப்படி?

Exchange Student களை அமெரிக்கா மற்றும் பல வெளிநாடுகளுக்கு அனுப்ப எற்பாடு செய்யும் அமைப்புகள் பல ஜெர்மனியில் உள்ளான உதாரணமாக Council into முதலியன.

மாற்று மாணவர்களுக்கான தகுதிகள்:-வயது 15 பூர்த்தி ஆகியிருக்க வேண்டும். 18 வயதுக்குள் இருக்கவேண்டும்.

- இங்கு உயர்நிலைப்பள்ளியில் மதிப்பெண் குறைந்தபட்சம் Note3 பெற்று இருத்தல் வேண்டும்.

முதலில் இந்த அமைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும். புகைப்படத்துடன் மாணவர்கள் 11ஆம் வகுப்பு மதிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் நகல், மாணவர் பற்றிய விவரங்களையும் அனுப்ப வேண்டும். அதன்பின் அமைப்பி லிருந்து படிவங்கள் அனுப்பப் படும். இதை கவனமாகப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

முன் அட்டையில்

வித்தியா குமாரசாமி, அருண் குமாரசாமி (பள்ளிப் பருவத் திலும்,கல்லூரிப் பருவத்திலும்)

பின்னர் இந்த அமைப்பிலிருந்து மாணவருக்கும் அவர்களின் பெற்றோருக்கும் நேர்முக விசாரணை ஒன்று ஏற்பாடு செய்வார்கள். தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு அமெரிக்காவில் பயில வேண்டிய பள்ளியும் அவர்கள் தங்க வேண்டிய குடும்பமும் ஏற்பாடு செய்யப்படும்.



அமெரிக்காவில் மாணவர்கள்....

அமெரிக்காவில் எந்தப் பகுதிக்கு போக விரும்புகிறார்கள் என்பதை மாணவர்கள் குறிப்பிடலாம். மாணவர்களுக்குத் தெரிந்த குடும்பம் அமெரிக்காவில் இருப்பின் அதனை முன்கூட்டியே இந்த அமைப்புக்கு தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிந்த குடும்பம் இருந்தால் செலுத்த வேண்டிய தொகையில் சலுகை கிடைக்கும்.

நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவருக்கு உதவித்தொகை கிடைக்கும் வாய்ப்பும் உண்டு. நிதி உதவி பெற விரும்பும் மாணவர்கள் 31.10.1999க்கு முன் விண்ணப்பித்திருக்க வேண்டும். மாணவர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்ல விரும்பின் 30.11.99க்குள்ளும், மற்றைய மாணவர்கள் 31.3.2000க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும்.

பயில ஏற்பாடு செய்யும் அமைப்புக்கு மாற்று மாணவர்களை அமெரிக்கா அனுப்ப ஏற்பாடு செய்வதற்கு 3 மாதங்களுக்கு சுமார் 6000 - DM, 5 மாதங்களுக்கு சுமார் 7600 - DM, 10 மாதங்களுக்கு சுமார் 8600 - DM, செலுத்தவேண்டும். மாணவர்களின் செலவிற்காக மாதமொன்றுக்கு சுமார் இருநூறு அல்லது இருநூற்றைம்பது அமெரிக்கா டாலர்கள் பெற்றோர் அளித்திட வேண்டும்.

என்ன அமெரிக்காவில் பயில நீங்களும் ஆர்வமாயிருக்கிறீர்களா ? மேலும் தகவல்கள் வேண்டுபவர்கள் பயணம் இதழைத் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம்.

-சசிவா

GOPARA GNANAM



அனைத்து ஜவுளிகளையும் ஒரே இடத்தில் வாங்க
ராசியான இடம்

2000ற்கு மேற்பட்ட டிசைன்களில் பலவகை
வர்ணங்களில் பலவகை சாறிகள்
இவை மட்டுமா?
மிருதங்கம், வீணை, அழகு சாதனங்கள் போன்ற
பலவகைப் பொருட்கள்... உங்கள் எண்ணக் கனவுகள்
நிறைவேற அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

Altenberger Str-9, 48161 Münster
Tel. : 02533 93 33 33  Fax : 02533 93 33 35
Mobil : 0171 33 06 542  ISDN 93 33 34

GOPARA GNANAM
IMPORT & EXPORT



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உச்சக் கட்டம்

ஒரு நல்லெண்ணெய் விளம்பரத்தில் 'இதெல்லாம் பொம்பளைங்க சமாச்சாரம்' என்று பார்த்திருப்பீர்கள். உண்மைதான். செக்ஸைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பொம்பளைங்க சமாச்சாரமாகத்தான் பார்க்கிறார்கள். செக்ஸ் மட்டும் எப்போதுமே 'ஆம்பளைங்க சமாச்சாரம்' தான்.

பத்திருபது ஆண்டுகளுக்கு முன்புவரை ஒரு பெண் தனக்கு திருப்தியான செக்ஸ் உறவை எதிர்பார்க்கவோ, தனக்கு விருப்பமான முறையில் அனுபவிக்கவோ இயலாத காரியமாக இருந்தது. தரையைக் கழுவுவது போலவும், வெங்காயத்தை உரிப்பது போலவும் அதுவும் ஒரு வீட்டுவேலைபோல சுவாரஸ்யமில்லாத விஷயமாக இருந்தது.

கடந்த நூற்றாண்டுவரை திருமணமும்கூட ஆணின் விவகாரமாகவே கருதப்பட்டது. பெண்ணைப்பற்றி சிந்திப்பது குறைவு. கணவனின் பாலியல் விருப்பத்தையும், பிற தேவைகளையும் நிறைவேற்றும் ஒரு இயந்திரம் பெண். அவ்வளவுதான். ஆனால் இப்போது முன்னேற்றம் தெறிகிறது. ஆண்களைப்போலவே பெண்களும் தங்கள் விருப்பத்தைப் பேசவும், அதனை அடையவும் சற்று முன்வந்துள்ளனர். இன்று பல புத்தகங்களும், கட்டுரைகளும் ஆரோக்கியமாக பாலியல் உறவுக்கான தீர்வை ஏற்படுத்தித் தருகின்றன. செக்ஸைப்

ஊர்மிளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொறுத்தவரையில் உச்சகட்ட இன்பத்தை அடைவது என்பது ஆண்களுக்கு எளிதில் நிகழ்கிறது. பெண்ணுக்கு அவ்வளவு எளிதில் நிகழ்வதில்லை என்பதால் அவ்விஷயத்தில் அவளுக்கு உரிமையில்லை என்று கூறஇயலாது.

செக்ஸில் திருப்தி என்பது ஆணும் பெண்ணும் முழு மனதுடன் சேர்ந்த ஒரு சங்கமத்தின் வெளிப்பாடே. உடல் மற்றும் மனநிலைகளும் பல பெண்களுக்கு முழு உச்சத்தை எளிதாகவும் அடிக்கடியும் அடையவிடாமல் செய்கின்றன. துரதிர்ஷ்டவசமாக சிலர் இதனைத் தவராக எண்ணிக்கொண்டு தம்மால் முழு இன்பத்தைப் பெற இயலாது என்று வருந்துகிறார்கள். அந்த ஏக்கத்தின் விளைவாகவே எதிர்காலத்தில் அதைப்பெற இயலாமலே இருந்துவிடுகிறார்கள்.

பொதுவாக பெண்களைப் பொறுத்தவரை பயஉணர்ச்சியே உச்சத்தை அடையவிடாமல் தடுக்கிறது. சாதாரணமாக ஒரு ஆணுக்கு தன் ஆண்மையில் சந்தேகம் வரும்பொழுது இவ்வெண்ணம் நாளடைவில் அவனை ஆண்மையற்றவனாக ஆக்கிவிடுகிறது. இதற்குக் காரணம் அளவுக்கு அதிகமான எதிர்பார்ப்பும், எப்படியாவது அடையவேண்டும் என்ற பயம் கலந்த முயற்சியும்தான் .

அதைப்போலவே பல பெண்களும் தாங்கள் உச்சத்தை அடையாத போது தங்களையே குறைபட்டுக் கொள்கிறார்கள். தாங்கள் படித்த மற்றும் கேள்விப்பட்ட உறவை முழுமையாக அடையவில்லையே என்ற வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டு, சாதாரண பெண்களிலிருந்து அவ்வுணர்ச்சியில் தாங்கள் குறைந்தவர்களோ என்று கருதிக்கொள்கிறார்கள். பெண்ணின் உச்சகட்டம் என்பது தாங்களே உடலாலும், மனதாலும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய ஒன்றாகும். இதன் காலம், வேகம் ஆகியவை ஒவ்வொரு புணர்ச்சிக்கும், ஒவ்வொரு பெண்களுக்கும் மாறுபடுகிற ஒன்றாகும். இது ஏற்கெனவே சொன்னது போல் பெண்ணின் உடல்நலம், மனநலம் மற்றும் அவளுடைய சக்தி, ஆணின் ஒத்துழைப்பு இவைகளைப் பொறுத்து மாறுபடும். இதுகுறித்த விவரங்களை அறிந்திருக்கும் பெண்கள் உச்சத்தை அடையவில்லையே என்று நிலைகுலைவதில்லை. ஏனெனில் ஒவ்வொரு உடலுறவின்போதும் அது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றல்ல என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இத்தகைய பெண்கள் உச்சகட்டத்திற்குத் தடையாக தங்களுடைய பங்கை குறைத்து மதிப்பிடுவதில்லை. ஆனால் அவர்கள் அதற்குத் தகுந்தாற்போல தங்களை அடுத்தமுறைக்கு தயார் செய்துகொள்கிறார்கள். தங்களுடைய ஆசைகளை, தேவைக்ளை ஆணிடம் தைரியமாக வெளிப்படுத்துகிறார்கள். ஆணுக்கு உச்சகட்டம் முடிந்துவிட்டால், தான் இன்னும் அதை அடையவில்லையென்று ஆணின் காதில் கிசுகிசுக்க இவர்கள் தயங்குவதில்லை. ஒரு பெண் உச்சம் அடையாதபோது சுயஇன்பம் மூலம் அடைய முயற்சி செய்கிறாள். சில சமயங்களில் ஆண் பெண் இருவருமே ஒருவருக்கொருவர் இதை செய்துகொள்வதன் மூலம் இன்பத்தை எட்டுகிறார்கள். பொதுவாக உடலுறவில் நான்கு நிலைகள் சுழற்சியாக இடம்பெறுகின்றன. *1.* Excitement Phase



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(செக்ஸ்பற்றிய உணர்வு தோன்றுதல்) 2. Plateau Phase (உறவுக்காக தயார் நிலைக்கு வருதல்) 3. Orgasmic Phase (உச்சகட்ட நிலை. இது நம் தேவைக்கு முன்பே சில நேரங்களில் நிகழ்ந்து விடுகிறது) 4. Resolution Phase (பழைய நிலைக்குத் திரும்புதல்). பெண்ணின் உடற்கூறு ஆணைப்போன்றதல்ல. ஏற்கெனவே கூறியபடி எளிதில் அவள் உச்சம் எய்துவதில்லை. அவள் நான்காவது நிலை அடைந்த பின் தற்காலிகமாக இரண்டாவது நிலைக்கு செல்கிறாள். எனவே மீண்டும் இங்கே மூன்றாவது நிலை தேவைப்படுகிறது. பெண்ணின் இத்தகைய உணர்ச்சிகளையே பலநிலை உச்சம் (Multiple Orgasm) என்கிறோம்.



இந்தப் பல நிலை இன்பத்தை எட்ட பத்து வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

♥ எல்லாமுறையும் உச்சகட்டம் கிடைக்கும் என்று கூறமுடியாது என்பதை ஏற்றுக்கொண்டு, மனதை அதற்குத் தகுந்தாற்போல் வைத்துக்கொண்டால், மனக்குழப்பத்தினால் ஏற்படும் தடைகள் தவிர்க்கப்படும்.

♥ கருவுரும் பயம் இருந்தால் அதற்கான தடுப்புச் சாதனங்களைப் பயன்படுத்தினால் பய உணர்ச்சி நீங்கும்.

♥ கவர்ச்சியான, மெல்லிய இரவு உடைகளையும், இனிய சூழலை உருவாக்கக்கூடிய வாசனைப் பொருட்களையும் (மல்லிகைப் பூ மாதிரி) பயன்படுத்தி உங்கள் ஆணை ஈர்க்கச் செய்யலாம்.

♥ எந்தவிதமான தொந்தரவோ தடைகளோ ஏற்படாத பொருத்தமான நேரத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

♥ படித்த, கேள்விப்பட்ட சமாச்சாரங்களை யெல்லாம் நடைமுறையில் முழு சதவிகிதம் எதிர்பார்க்கக் கூடாது. முன்பே கூறியது போல நேரம், வேகம் என்பதெல்லாம் பெண்ணுக்குப் பெண் மாறுபடும். ஒவ்வொரு உடலுறவிலும் மாறுபடும்.

♥ உங்களுக்கு பிடித்தமான உறவு முறைகளையும் வழிகளையும் ஆணிடம் கூறி அதன்படி அவரை இயங்கச் செய்யலாம்.

♥ அவசரமாக அள்ளித் தெளிக்கிற வேலையை வைத்துக் கொள்ளாதீர்கள். மெதுவாக, ரசனையாக உறவில் ஈடுபட முற்சிக்கவேண்டும். இதற்கு கால அட்டவணை போட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

இந்த இதழில்
பெண்களுக்கு
உடலுறவின்போது
நிகழும் உச்சகட்டம்
பற்றி விவாதிக்கிறார்
டாக்டர்
**ஷர்மினா**

♥ உடலுறவில் உச்சகட்டம் அடையாதபோது வாய்வழிப் புணர்ச்சி, ஒருவருக்கொருவர் சுயஇன்பம் இவற்றின் மூலம் உச்சகட்டம் அடைவது வெட்கப்படத்தக்கதோ, தவறானதோ அல்ல.

♥ புதிய கோணங்களை, நிலைகளை நீங்களும் பயன்படுத்தி ஆணையும் பயன்படுத்துமாறு செய்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

♥ செக்ஸ் என்பது உச்சகட்டம் மட்டுமல்ல எனவே எல்லா நேரங்களிலும் அதனை எதிர்பாராமல் மற்றவற்றை நன்கு அனுபவித்து ஆணுடன் இணைந்த இன்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவான கருத்து இதுதான். முழு உச்சகட்டம் கிடைக்காததால் சோர்ந்து போய்விடாமல், அதற்கு தன்னை தயார்படுத்திக்கொள்கிற பெண்தான் அதனை அடைய முடியும். இதைப் புரிந்து கொண்ட பெண்ணுக்கு உச்சகட்டம் ஒரு புதிர் அல்ல. . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரங்கும் இல்லத்தின் இனிய பணிகளுக்கு உதவும் உயர்ந்த உள்ளங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தனம் | சரசாலை | சத்தியன் | கரம்பன் | Melbourne | Australia |
| சந்திரா | கரம்பன் | சிவநாதன் | கரம்பன் | Melbourne | Australia |
| குமரி | சுருவில் | ஸ்ரீ | கரம்பன் | Toronto | Canada |
| உமா | திருநெல்வேலி | ராஜநாயகம் | சூராவத்தை | Vaureal | France |
| வெள்ளையம்மா | வண்ணார்பண்ணை | தெய்வேந்திரம் | வண்ணார்பண்ணை | Villepinte | France |
| வளர்மதி | கிளிநொச்சி | துரைஸ் | கிளிநொச்சி | Paris | France |
| ரூபினி | பருத்தித்துறை | செல்வநாதன் | பருத்தித்துறை | Berlin | Germany |
| மித்திரா | மிருசுவில் | றொபின்சன் | யாழ்ப்பாணம் | Eshole | Germany |
| பகவதி | கொழும்பு | | | Karlsruhe | Germany |
| தேவா | நீர் கொழும்பு | | | Karlsruhe | Germany |
| இந்து | கோயம்புத்தூர் | குமாரசாமி | கோயம்புத்தூர் | Langen | Germany |
| நந்தினி | கொக்குவில் | மனோகரன் | கொக்குவில் | Offenbach | Germany |
| விஜயா | கள்ளியங்காடு | மகேந்திரன் | மானிப்பாய் | Offenbach | Germany |
| றெஜினா | சாவகச்சேரி | | | Werdohl | Germany |
| தேவி | கரம்பன் | றோய் | கரம்பன் | Frankfurt | Germany |
| மாதங்கி | புலோலி | சவுந்தர் | கரவெட்டி | Wageningen | Netherland |
| நிர்மலா | சுண்டுக்குளி | சித்திவினாயகன் | புங்குடுதீவு | Oslo | Norway |
| ஈசா | நல்லூர் | மூர்த்தி | நல்லூர் | Augst | Switzerland |
| மேர்சி | மன்னார் | ரஞ்சன் | கரம்பன் | Romford | U.K |
| கத்தரின் | கரம்பன் | பசில் | நாரந்தனை | Bromley | U.K |
| மணிமேகலை | நெடுந்தீவு | நாகேஸ்வரன் | நயினாதீவு | Eastham | U.K |
| மல்லிகா | கரம்பன் | ஜோர்ச் | கரம்பன் | Hendon | U.K |
| சாந்தி | கரம்பன் | கிருஸ்ணா | கந்தர்மடம் | New Jersey | U.S.A |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பு இலங்கை வானொலியில் முகத்தார் வீடு என்ற நாடகத்தின் மூலம் மக்களின் மனங்களைக் கவர்ந்தவர் முகத்தார் யேசுரட்ணம். இவர் ஈழத்துத் திரைப்படங்களிலும் பவனிவந்தவர்.

யாழ்ப்பாணத் தமிழில் பேசி இலங்கை வானொலி மூலம் பிரபலமானவர் அப்புக்குட்டி ராஜகோபால். இவரும் ஈழத்துத் திரைப்படங்களில் தோன்றியிருக்கிறார்.

தனி நடிப்பாலும், வில்லிசை மூலமாகவும் ஈழத்தில் ஏராளமான ரசிகர்களைப் பெற்று, புலம் பெயர் வாழ்விலும் பல மேடைகள் கண்டு மக்கள் மனதில் நின்றவர் லூஸ் மாஸ்டர் இன்ப ராஜா.

இந்த நகைச் சுவை மன்னர்கள் மூவரும் ஒன்று கூடினால் எப்படி இருக்கும்?



*லூஸ் மாஸ்டர் ஐசாக் இன்பராஜா, அப்புக்குட்டி ராஜகோபால், முகத்தார் யேசுரட்ணம்*

# மூவேந்தர் இணைந்தனர்

இம்மூவரும் இணைந்த நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சியை அண்மையில் ஜேர்மனியில் ஏற்பாடு செய்திருந்தார் கொலண்ட் நாட்டைச் சேர்ந்த சௌந்தர்.

சிரிப்பு வெள்ளத்தில் மக்களை மூழ்கடித்த இந்நிகழ்ச்சியின் நினைவுகள் இதில் பங்கேற்ற ஜேர்மன் தமிழ் ரசிகர்களின் மனதில் நீண்டநாள் நீடித்திருக்கும்.

*இரங்கும் இல்லத்தின் இசை மாருதவிழா. முன் வரிசையில் பார்வையாளர்களாக ரகுநாதன், அப்புக்குட்டி, யேசுரட்ணம்.*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சபாஷ்! சரியா
# போட

கவர்ச்சி மழையினால் ரோஜா, ரம்பாவையெல்லாம் ஓரங்கட்டி வீழ்த்திய சிம்ரனுக்கு இப்போது ஆபத்து வந்து சேர்ந்திருக்கிறது மாளவிகா வடிவத்தில். சியாமளா ஹவுசில் படப்பிடிப்பில் இருந்த மாளவிகாவை ஓரங்கட்டி, "உங்கள் வெற்றியின் ரகசியம்?" என்ற நாட்டுக்குத் தேவையான கேள்வியைக் கேட்டு வைத்தேன். "எல்லாம், உன்னைத்தேடி, ஆனந்தப் பூங்காற்றே படங்களின் வெற்றிகளினால்தான்.." என்று சொல்லிவிட்டு தமிழ் இளைஞர்களை மிரட்டிக்கொண்டிருக்கிற அந்த அகலவாய்ப் புன்னகையை என் மீது வீசி விட்டு நகர்ந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அது மட்டும் காரணமல்ல என்பதை தமிழ் ரசிகப் பெருங்குடி மக்களுக்கு சொல்லியாக வேண்டிய கடமை எனக்கிருக்கிறது.

கார்த்திக், அஜித் என்று கதாநாயகர்கள் மட்டுமல்லாது இளம் டைரக்டர்களும் வாயாரப் புகழ்ந்து தள்ளுமளவுக்கு, வேலை என்று வந்து விட்டால் இரவு பகலாக ஒத்துழைக்கும் மாளவிகாவின் 'தாராள' நெஞ்சம்தான் காரணம்...

கதாநாயகர்களை நினைத்தால்தான் பொறாமையாக இருக்கிறது.

சாம்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு தென்னாப்பிரிக்கக் கவிதை

# அவன் வாழ்கிறான்...



அவர்கள் அவனை ஆயிரம் தடவை
கொலை செய்தார்கள்.
ஆயிரம் தடவை அவனைக்
கொல்கிறார்கள் அவர்கள்.
மீண்டும் மீண்டும் ஒவ்வொரு நாளும்.

மலைப்பிரதேசத்தில் பாலைவனத்தில்
நகரத்துத் தெருக்களில்
அவனை ஆயிரம் தடவை
அவர்கள் கொலை செய்தார்கள்.

அவன் வாழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன்
முன்னைவிட இப்போது.
கொட்டுகிற குருதியில் அவன்
வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

உங்களைவிட அவனை
நன்கறிவேன் நான்.
யாரையும்விட என் மகனை
நான்தான் கண்டறிய முடியும்.

எதிரிகளுக்கு எங்கெல்லாம்
தடைகள் நேரிடுகின்றனவோ
அங்கெல்லாம் அவன் வாழ்கிறான்.

என்னை நம்புங்கள்
ஒருபோதும் பொய் சொல்ல மாட்டாள்
ஒரு தாய்.
பொய் சொல்லவே மாட்டாள்.

அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.
வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறான்
அங்கே . . .

●

**லியவோஸ் காஸ்ராய்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சைவம் என்பது சாப்பாடு அல்ல

இன்றைய இளைய தலைமுறையினருக்கு இந்து சமயத்தின்பால் கொஞ்சமும் நாட்டமோ ஆர்வமோ ஏற்படுவதே இல்லை. இளைய தலைமுறையினர்தான் இப்படி என்றால் பெரியவர்கள், ஓரளவு தத்துவங்களிலும் உலக விசயங்களிலும் பொது விசயங்களிலும் ஈடுபாடு கொண்டு பொது வாழ்விலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் இந்து சமயத்தின் உண்மை நிலையை அறியாமல் அதனில் ஈடுபாடு காட்டாமல் இருந்து வருகின்றார்கள். இந்நிலை தமிழர்கள், அதுவும் குறிப்பாக இந்துக்கள் என்று தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளும் மக்கள் இருக்கும் எல்லா நாடுகளிலும் இருந்து வந்தாலும் புலம் பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் வருத்தம் தரக் கூடிய அளவிலே இருக்கின்றது.

○ ஆலயங்கள் பற்பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வேதபாடசாலைகளில் சமஸ்கிருத பாடங்களை முறையாகவோ ஓரளவோ படித்தவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டு, பொதுமக்களின் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்பேற்று ஆலயங்களைப் பரிபாலித்து வருவது.

○ ஆலய வழிபாட்டில் அர்ச்சனைக்கு மிகப் பெரிய முக்கியத்துவம் வழங்கப்படுதல்.

அர்ச்சகர் பக்தர்களிடம் நாள், நட்சத்திரம், பெயர் ஆகியவற்றைக் கேட்டு வந்திருப்பவர்கள் நலம் பெற வேண்டி இறைவனுக்கு அர்ச்சனை செய்வார். பெரும்பாலான நேரங்களில் அர்ச்சகர் அர்ச்சனைப் பொருட்களை எங்கோ வீசிக்கொண்டு, கண்கள் வந்திருக்கும் பக்தர்களைப் பார்த்துக் கொண்டு, மனத்தில் ஏதோ ஒன்றினை நினைத்துக் கொண்டு வாயும் கையும் மாத்திரம் கடமையைச் செய்யும் நிலையில் வேலை நடந்து கொண்டிருக்கும்.

○ பெண்கள் லக்ஷ்மி பூஜை அல்லது துர்க்கை பூஜை என சடங்குகள் செய்வர். ஆனால் அச்சடங்குகளைச் செய்ததின் உள்ளார்ந்த அர்த்தம் புரியாமலேயே அதனைச் செய்வர்.

○ கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் பகுதி நேரமாக சாதகம் கணிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருதல்.

○ இதையெல்லாம் விட ஒரு சில ஆலயங்களில் நிர்வாகத்தில் உள்ளவர்கள் ஆலயத் திருப்பணிக்காகச் சேர்க்கும் பணத்தைத் தங்கள் சொந்தப் பணமாகவே நினைத்து அதனைத் தாங்களே பயன்படுத்தும் நிலை.



இந்து சமயம் ஒரு பொய் காட்சியைக் காட்டிக்கொண்டு நிற்கிறது: இன்றைய தலைமுறையினரிடம் சமயம் குறித்த சரியான சிந்தனைகள் இல்லை என்று வாதிடுகிறார்

ஜேர்மனியைச் சார்ந்த

**கே. சுபாஷினி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

❍ ஆலயங்களின் மிகப் பெரிய பணியான திருவிழா ஒன்றினை அதிக பொருட் செலவில் செய்தல். தேர்த்திருவிழா, தீ மிதித்தல், காவடித்திருவிழா என் ஒவ்வொரு ஆலயத்திற்கும் தனித்தன்மையோடு ஒரு திருவிழா நடக்கும். வருகின்ற பெரும்பாலான பக்தர்கள் மனத்தில் அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தின் சிந்தனை இருக்காது. மாறாக பிறர் அணிந்திருக்கும் ஆடை அணிகலன்களை கவனிப்பதிலும், நண்பர்களைத் தேடி அவர்களோடு சேர்ந்து கதை பேசுவதிலும் கவனம் செலுத்துவார்கள். சில இடங்களில் குழுச் சண்டைகளும் கூட ஏற்படுவதுண்டு.

❍ சில இடங்களில் தெய்வப் பாடல்கள் பாடுகின்றோம் என்று சொல்லி அர்த்தம் புரியாத பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டும் குரு பூசை செய்து கொண்டும் இருப்பர். தமிழில் இருக்கின்ற தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திவ்யப்பிரபந்தங்கள், திருமந்திரம் போன்றவை என்னவென்றே பலருக்குத் தெரியாத நிலை.

❍ மனக்குறையையும் வாழ்க்கையில் இருக்கின்ற கஷ்டங்களையும் தோஷங்களையும் நீக்க முடியும் என்று கூறிக்கொண்டு மந்திரம் செய்தல், குறிபார்த்தல், தோஷம் கழித்தல், சாமி ஆடுதல் என கீழான முறைகளில் மக்களிடம் பணம் பரித்தல்.

❍ இந்து சமயம் என்றால் சாதி அடிப்படையில் அமைந்தது என்று நினைத்துக் கொண்டு மக்களைப் பேதப்படுத்தி உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்று நடைமுறைப்படுத்துவது.



திருமதி கே. சுபாஷினி

❍ பெண்கள் என்றும் ஆண்களுக்கு அடுத்த நிலையில் இருக்க வேண்டியவர்கள் என்று நினைத்து பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் இரண்டாம் இடத்தை அமைத்துக் கொடுக்கும் நிலை.

❍ இறைவனின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆலயங்களில் உயிர்ப்பலியிடுதல்.

❍ தியானம், கூட்டுப் பிரார்த்தனைகள் போன்றவற்றில் சிறிதும் ஆர்வமில்லாத நிலை.

இன்று பெரும்பாலான மக்கள் மத்தியிலே நான் மேலே குறிப்பிட்ட வகையில் தான் இந்து சமயம் ஒரு பொய்க் காட்சியைக் காட்டிக் கொண்டு நிற்கின்றது. இந்நிலை மாற வேண்டுமென்றால் முதலில் நாம் செய்ய வேண்டியது என்ன?

---

சைவ சித்தாந்த பாடங்களும் விளக்கங்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கீழ்க்காணும் வலைப்புலத்தில் இருக்கின்றன. கணினி உள்ளவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி மகிழ விழைகின்றோம்.

http://www.malaysia.net/people/subas/

உலக சைவப் பேரவை உலகெங்கிலும் கிளைகளை ஏற்படுத்தி சைவ சித்தாந்த வகுப்புகளையும் விளக்கங்களையும் நடத்தி வருகின்றது. தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் அதன் தலைமையகத்திற்கோ அல்லது மேற்குறிப்பிட்ட வரைலப்புலத்திலோ அந்தந்த நாடுகளின் பிரதிநிதிகளோடு தொடர்பு கொள்ளலாம். தலைமை முகவரி :

T.T. Sivanandhi Adikalar
Meikandhaar Aadheenam
72, King Edward Road, Waltham Stow, London E17 6HZ, UK

அல்லது subashini@iname.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

●

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்த மாதப் பிரமுகர்



ஈர இமைகளுக்கு ஆறுதல் விரல்களால் நீர் துடைக்க தாகம் கொண்டுள்ளது பயணம். கொடும் பாலைப் பயணத்தில் இளைப் பாறுதல் தரும் நிழல் தருவாய் நாங்கள் இருக்க விரும்புகிறோம்.

மனிதநேயமும், சமூக நோக்கும், கலை இலக்கியப் படைப்பாற்றலும் கொண்டவர் களை அறிமுகப்படுத்த பயணம் ஆயத்தமாய் உள்ளது. இத் தகையோர், உங்கள் நண்பர்களா?

இந்த மாதப் பிரமுகர் பகுதியில் நிழல் படத்துடன் உங்கள் நண்பரை அறிமுகப்படுத்துகிறோம். அனுப்பி வையுங்கள்.

நமது சமயத்திற்கு இருக்கின்ற பெயரே உண்மையான ஒரு பெயர் அன்று என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இந்து சமயம் என்பது திராவிடப் பண்பாட்டினரின் சமய நெறியைக் குறிக்கும் பெயர் அன்று. (திராவிடர் என்பது கடவுள் நம்பிக்கையற்றவரைக் குறிக்கும் சொல் அல்ல. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளைப் பேசுகின்ற ஆரியர்கள் அற்றவர்களைக் குறிக்கும் சொல்லே அது.) திராவிடர்களுக்கு சமயம் என்பது இல்லை; சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று ஒருவரும் இல்லை; அதன் வேதமாக ஒரு நூல் இல்லை.

அப்படியென்றால் நமது சமயம் தான் என்ன? திராவிடர்களுக்கு ஒருநெறிதான் இருக்கிறது. அதுதான் சைவ நெறி; அதுவே ஒரு நெறி; (சைவம் என்றால் சைவ சாப்பாடு என்று நினைத்துக் கொள்ள வேண்டாம்).

சைவ நெறியைப் பற்றி ஒரு சிறிய அறிமுகம் இங்கு தேவைப்படுகின்றது.

சைவ நெறி பக்திக்கு முதலிடம் கொடுப்பது. இங்கே இறைவனுக்கு ஒரு நாமம் இல்லை. இறைவன் என்பவன் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் யாருக்கு எப்படி வேண்டுமோ அப்படித் தென்படுபவன். இறைவனை நாம் ஆலயத்திற்குச் சென்றுதான் பார்க்க வேண்டும் என்னும் நிலையில்லை. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் நம்முள்ளும் இருக்கின்றான். எப்போதும் மாறாது இருக்கின்றான். அவனுக்கு ஆண், பெண், தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதி, பெரியவர், குழந்தைகள், மிருகங்கள், தாவரங்கள் என்று எந்த வகையிலும் பாரபட்சமில்லை. யார் ஒருவர் உளமார்ந்த பக்தியை வைத்து தன் உள்ளே உறைந்திருக்கின்ற இறைவன் மற்ற உயிரினங்களுக்குள்ளும் இருக்கின்றான், இருந்து இவ்வுலகை செயல்படுத்துகின்றான் என்று அறிந்து கொள்கின்றார்களோ அவர்களே சைவ சமயத்தை உணர்ந்தவளாகின்றனர்.

இந்த உயரிய சைவ சமயத் தத்துவங்கள் சைவ சித்தாந்த சாத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இச்சாத்திரங்கள் பல ஞானிகளால் பாடப்பட்டும் விளக்கமளிக்கப்பட்டும் வந்துள்ளதை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதே நமது பற்பல குழப்பங்களுக்குக் காரணமாக இருக்கின்றது. சைவ சித்தாந்தச் சாரங்கள் தொல்காப்பியம், திருமந்திரம், நீதி நூல்கள், சங்க இலக்கியங்கள், பன்னிரு தேவாரத் திருமுறைகள், திருவாசகம், மெய்கண்ட சாத்திரங்கள், சித்தர் இலக்கியங்கள், திருவருட்பா ஆகிய நூற்களில் பொதிந்து கிடக்கின்றன.

சைவ நெறியின் சாத்திர நூற்களாகப் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும் தோத்திர நூற்களாக பன்னிரு திருமுறைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. உள்ளார்ந்த பக்தியை வலியுறுத்துவதாக தோத்திரங்களும் ஆழமான தத்துவங்களை விளக்குவனவாக சாத்திரங்களும் இருந்து வருகின்றன.

சைவ சமயத்தைப் படித்துப் பயன் பெற வேண்டியது தமிழர்களாகப் பிறந்த அனைவரின் கடமையாகும். இறைவழிபாடு என்பது வெறும் சடங்குகள் மாத்திரம் அன்று; அது நமது உள்ளத்தில் இருக்கின்ற அழுக்குகளை, மூட நம்பிக்கைகளை, தீய குணங்களைத் துடைத்து உள்ளே மறைந்திருக்கும் நன்மைகளை வெளிப்படுத்தும் மருந்தாக அமைவது. சடங்குகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளித்து வந்தால் நாம் நமது பண்பாட்டை, கலாச்சாரத்தை, தொன்மை நிறைந்த நெறிகளை நமது வருங்கால சந்ததியினருக்குத் தர இயலாது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரங்கும் இல்லத்துக்கு நன்றி...



**இரங்கும் இல்லத்தின் மூலமாக ஜேர்மனியின் டாம்ஸ்டெட் பல்கலைக் கழகத்தில் பயில வாய்ப்புப் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த மாணவர் சுந்தரபுத்தனின் நன்றிக் கடிதம் . . .**

**சுந்தர புத்தன்,**
**டாம்ஸ்டெட் பல்கலைக்கழகம், ஜேர்மனி**

அன்புடையீர், வணக்கம்.

முதலில் இரங்கும் இல்லத்திற்கும், மதிப்பிற்குரிய ஸ்ரீபதி சிவனடியான் அவர்களுக்கும் நன்றியைப்
பரிமாறிக்கொள்கிறேன்.

போக்குவரத்து வசதியே சரிவர இல்லாத ஒரு குக்கிராமத்திலிருந்து புறப்பட்டு, சிறு நகரத்தில் படித்து
சென்னையைத் தொட்டவன் நான். குடும்பத்தின் சூழல் என்னை வேலைக்குத் தள்ளியது. என் இயல்பான
ஆர்வம் பல மனிதர்களை பெற்றுத் தந்தது. ஒரு சாயங்காலத்தில் அந்த நல்ல உள்ளம் கொண்ட மனிதரைச்
சந்தித்தேன். அவர் ஸ்ரீபதி சிவனடியான். அந்தச் சந்திப்பு வாழ்வின் திருப்புமுனை. இரங்கும் இல்லம்
செய்கிற, செய்த உதவியையும், கொடுத்த ஊக்கத்தையும் மறக்க முடியாது. டாம்ஸ்டெட் பல்கலைக்
கழகத்தில் படிப்பதற்கான அனைத்து அடிப்படைகளையும் செய்து உதவினார் ஸ்ரீபதி அவர்கள். ஜேர்மனி
மொழியில் படிக்க வேண்டுமென்ற எனது தணியாத ஆர்வத்தைப் புரிந்து கொண்டு செயல்படுத்தி, பெரும்
மாற்றத்தை, மலர்ச்சியை என் வாழ்வில் விதைத்த இரங்கும் இல்லத்தை, ஸ்ரீபதி சிவனடியான் அவர்களின்
கருணை உள்ளத்தை எப்படி மறக்க முடியும்? என்னைப் போன்ற மாணவர்களின் இளைஞர்களின்
முன்னேற்றத்திற்கு பேருதவி புரியும் ஸ்ரீபதி போன்ற நல்லெண்ணம் கொண்ட மனிதர்களின் பணி மேலும்
மேலும் சிறக்கும்.

எந்தவித ஆதாரமுமற்று மிகுந்த உத்வேகத்தோடு சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கையில் எதிர்பாராத
சந்திப்பு ஜேர்மனியில் படிப்பதற்கான சூழலை உருவாக்கித் தந்து விட்டது. என்போன்றவர்களின்
எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் இரங்கும் இல்லத்தை வணங்குகிறேன். ஸ்ரீபதி அவர்களை நன்றி
உணர்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

**சுந்தரபுத்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''பயணம்' மூலம்

# இரங்கும் இல்லத்திற்கு

உதவுங்கள்

அன்பு நண்பரே,

வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தில் எத்தனையோ நல்ல அன்பான உள்ளங்களைச் சந்திக்கின்றோம். இவர்களில் பலர் நிச்சயமாக உதவும் உயர்ந்த உள்ளங்களைச் சார்ந்தவர்கள். 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இரங்கும் இல்லம் கடந்த ஒன்பதரை (1990-1999) வருடங்களில் கிட்டத்தட்ட 18 இலட்சம் இலங்கை ரூபாவுக்குப் பெறுமதியான அன்பளிப்புகளும் உதவியும் செய்துள்ளது. அமைப்பின் செயற்பாடுகளைக் கூறி, நம்புங்கள் நன்மை செய்ய நல்குங்கள் என தங்களின் ஆதரவை வேண்டுகின்றோம்.

1. தமிழீழத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்திக்கு நிதி உதவி.
2. தாயக உறவுகளுக்கு உதவ ஜேர்மனி- இங்கிலாந்து-கனடா- அவுஸ்திரேலியாவில் உள்ள புனர்வாழ்வுக் கழகம் மூலம் அன்பளிப்பு.
3. புகலிட நாடுகளில் கலைஞர்களை ஊக்குவித்து விருதும் பொற்கிழிகளும் வழங்கியமை.
4. தமிழ் மன்றங்கள்- விளையாட்டுக் கழகங்கள் - நாடக மன்றங்கள்-சஞ்சிகைகள்-வீடியோ பத்திரிகைகள்- CD இசைத்தட்டுகள் - இசைக்குழுக்கள் போன்றவைக்கு நிதி உதவிகள்.
5. தமிழக-அறிவுரைப் பேச்சாளர்கள்-கலைஞர்கள் ஜேர்மனிக்குள் வருவதற்கான நுழைவுச் சான்றிதழ் (Sponser) செலவுகள்.
6. உழைத்துக் களைத்த தமிழ் உள்ளங்களை உற்சாகப்படுத்தும் ஒன்றுகூடல் வைபவங்கள்
7. ஜேர்மனியில் வாழும் பல இன மக்களை தமிழர்களுடன் ஒன்றிணைக்கும் பல்கலாச்சார கலைவிழாக்கள்.

போன்றவை இதன் செயற்பாடுகளாகும்.

இவ் இரங்கும் இல்லம் ஏழு சம உரிமை நிர்வாகிகளினால் லாபநோக்கமற்ற சமூகப் பொதுப்பணி அமைப்பாக (Sympathy Home e.V. - Gemeinnutziger Verein) ஜேர்மனியின் பிராங்போர்ட் மாநகரத்தின் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடரும் செயற்பாடுகள்......

- ஜேர்மன் பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் நுழைவதற்கான சகல ஆலோசனைகளையும் வழங்கி, முடியுமாயின் ஜேர்மனிக்கு அழைத்தல்.
- இயல் இசை நாடகம் இத்துறைகளில் சிறந்த கலைஞர்களுக்கு ''கலைப்பவளம்'' எனும் விருதும் பொற்கிழியும் வழங்கல்.
- பயணம் சஞ்சிகை மூலம் உலகெங்கும் சிதறிப்பரந்து வாழும் ஆற்றல் கொண்ட தமிழர்களின் ஆர்வத்தை மற்றவர்கள் அறிய வெளிப்படுத்துதல்.
- தாயக உறவுகளுக்கு உரிமையுடன் உதவுதல்.

சாதனையாளர்கள், கலைஞர்கள், பட்டதாரிகள், பொதுப்பணியாளர்கள், தொழிலதிபர்கள் என இப்படியான பல்வேறு வகைப்பட்டோர்களின் ஆற்றல்களை வர்ணப்படத்துடனும் விரிவான கட்டுரையுடனும் காலத்தால் கரையாத கல்வெட்டாக வெளிக்கொணர்ந்து, தமிழ் மக்கள் பயன்பெற வேண்டுமென்பதே இரங்கும் இல்லத்தின் வெளியீடான பயணம் சஞ்சிகையின் நோக்கம். இச்சஞ்சிகை தமிழீழத்தின் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா நகரங்களிலும் - இந்தியாவின் மதுரை, சென்னை, பெங்களூர் நகரங்களிலும் - மற்றும் புகலிடத் தமிழர்கள் வாழும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, தெற்கு ஆப்பிரிக்கா, அரேபியா நாடுகளிலும் கிடைக்கக் கூடியதாக ஒழுங்குகள் செய்து வருகின்றோம்.

இவ்வர்ணச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு மாதம் இரண்டாயிரம் யூரோஸ் (Euros) முதலிட வேண்டியுள்ளது. மேலும் தமிழர் வியாபார ஸ்தாபனங்களில் வைத்து விநியோகிப்பதில் நடைமுறைச் சிக்கல்களும் வீண் செலவுகளும் பல உண்டு என்பதை அனுபவங்கள் மூலம் அறிந்திருக்கின்றோம். ஆதலால் தயவுசெய்து தாங்களோ அல்லது தங்களால் முடியாவிடில் நண்பர்களைச் சந்தாதாரர் ஆக்கித் தந்தோ அல்லது வருட இறுதியில் தங்கள் வருமான வரியில் இருந்து திருப்பி எடுக்கக் கூடிய வகையில் எமக்கு அன்பளிப்புச் செய்து பற்றுச் சீட்டைப் பெற்றோ இச்சஞ்சிகையின் வளர்ச்சிக்கும், இரங்கும் இல்லத்தின் நோக்கங்களுக்கும் உதவ முடியும் என்பதைத் தாழ்மையுடன் அறியத் தரு வதுடன், இது ஒரு தனிப்பட்டவரின் உழைப்பு இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

தயவுசெய்து பின்பக்கத்தில் உள்ள படிவத்தை நிரப்பி, முத்திரையை ஒட்டி எமக்கு அனுப்பிவைப்பதன் மூலம் தங்களின் பங்களிப்பிற்கு முன்கூட்டியே எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பின் செய்வோம் எனப் பின்போடாமலும், தவறிப் பின் போட்டால் மறந்துவிடாமலும் உதவி செய்து ஒத்துழைப்பீர்கள் என நம்புகின்றோம்.

பணப் பற்றாக்குறையால் பயணம் சஞ்சிகை தடைப்படின், தங்களால் சஞ்சிகைக்கு அனுப்பப்பட்ட நிதித்தொகை, ஸ்ரீபதி சிவனடியான் ஆகிய என்னால் திருப்பித் தரப்படும் என தனிப்பட்ட முறையில் உறுதிப் படுத்துகின்றேன்.

நம்புங்கள் நன்மையை
நல்குங்கள்

என்றென்றும் நன்றியுடன்
இரங்கும் இல்லம் சார்பில்,

ஸ்ரீபதி சிவனடியான்
12.09.99,
Frankfurt, Germany.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SYMPATHY HOME**
Post Box 750162
60531 Frankfurt
**GERMANY**

அன்பான இரங்கும் இல்லம் நிர்வாகிகளுக்கு,

இரங்கும் இல்லம் புரிந்துவரும் நற்பணிகளை அறிவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பின்வரும் ஒரு பெட்டியில் குறியிடுவதின் மூலம் எனது ஆதரவையும் உதவியையும் மனப்பூர்வமாக நல்குகின்றேன்.

❑ தற்சமயம் நான் உதவி செய்யும் நிலையில் இல்லை. ஆனால் ஆதரவு தரும் வகையில் எனது நண்பர்களின் விலாசத்தைக் குறிப்பிடுகின்றேன்.

A. Name :
Street :
City :
Country :

B. Name :
Street :
City :
Country :

❑ ஆறு பயணவெளியீடுகளைத் தொடர்ந்து அனுப்புங்கள். இதற்குரிய சந்தா 18 யூரோஸ் (Euros) பணத்தைத் தருகின்றேன்.

❑ பன்னிரண்டு பயண வெளியீடுகளைத் தொடர்ந்து அனுப்புங்கள். இதற்குரிய சந்தா 33 யூரோஸ் (Euros) பணத்தைத் தருகின்றேன்.

❑ தொடர்ந்து முப்பது வெளியீடுகள் அனுப்புங்கள். இதற்கான சந்தா 80 யூரோஸ் (Euros) பணத்தை முன்கூட்டியே தருகின்றேன். பணப் பற்றாக்குறையின்றி பயணம் வெளிவர வேண்டும் என்ற முறையில் எனது ஒத்துழைப்பை நல்குகின்றேன்.

❑ இரங்கும் இல்லம் புரிந்துவரும் நற்பணிகளை மனதில் கொண்டு, ஆயுள் சந்தாதாரராக இணைந்து கொள்கின்றேன். இதற்குரிய 300 யூரோஸ் (Euros) பணத்தை உடனே தருகின்றேன்.

❑ எனக்குச் சஞ்சிகையைத் தொடர்ந்து அனுப்புங்கள். அத்துடன் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையில் ............. யூரோஸ் (Euros) பணத்தை அனுப்புகின்றேன். வருடக் கடைசியில் வருமான வரியில் இருந்து எடுக்கக் கூடியதாக அன்பளிப்புப் பற்றுச்சீட்டு (Donation Receipt) அனுப்பிவையுங்கள்.

❑ எனக்குச் சஞ்சிகை அனுப்ப வேண்டாம். ஆனால் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையில் ......... யூரோஸ் (Euros) பணத்தை அனுப்புகின்றேன், வருடக் கடைசியில் வருமானவரியில் இருந்து எடுக்கக்கூடியதாக அன்பளிப்புப் பற்றுச்சீட்டு (Donation Receipt) அனுப்பிவையுங்கள்.

குறியிட்டபடி......... யூரோஸ் (Euros) பணத்தை எனது

1. Credit Card Number
Amex
Visa
Diners
Master
Expiry date

அல்லது வங்கியில்

2. Bank Name
Bank Number
Account Number
Street
Street
City

ஒருமுறை மாத்திரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

3. குறியிட்டபடி ........ யூரோஸ் ஐ (Euros) காசோலையாக (Cheque) இப்படிவத்துடன் இணைத்துள்ளேன்.

4. இரங்கும் இல்லத்தின் வங்கிக் கணக்கு இலக்கம் ஆரம்பித்ததும் அறிவியுங்கள், தாமதம் இல்லாது Account இல் செலுத்துகின்றோம்.

Signature : ..................................................
Date ..................................................
Name (Block Letter) ..................................................
Street
City
Country



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாளரங்கள்

## மு. கனகராசன்

வலது காலை எடுத்து வைத்துச் சீதா அந்த வீட்டினுள் முதன் முதலாக நுழைகிறாள். அவளின் கண்கள் கோமதியைத் தேடுகின்றன. சீதாவுக்கு ஆராத்தி சுற்றுகிறார்கள். தீபத்தால் திலகமிடப்பட்ட ஒரு சுமங்கலிப் பெண்ணின் முகம் போலும் பளிச்சென்ற அந்த வெள்ளித் தட்டம் உச்சி முதல் பாதங்கள் வரை சுற்றிவந்து தன்னை ஆசீர்வதிக்கும் போது அதைப்பற்றியிருக்கும் மணிக்கரங்களில் இரண்டு கோமதியினுடையதாய் இருக்கக் கூடாதா என அவள் எண்ணுகிறாள்.

ஆனால்........?

சீதா ஒரு புதிய விளக்கின் பிழம்பாக உருக்கொள்ளும் நாளாம். அது மங்களகரமான வேளையாம். அந்த நேரத்தில் கோமதி அங்கே நிற்கக் கூடாதாம்.

இந்தச் சம்பிரதாயமெல்லாம் சரியா தவறா? அதையெல்லாம் சீர்தூக்கும் ஆற்றல் சீதாவுக்குக் கிடையாது. அவள் கல்லூரியில் படித்தவள்தாள். அதற்காக ஒரு நாவலின் கதாநாயகிபோல 'சமூகத்தின் சாபத்தீடு'களைச் சாடி அதிகப் பிரசங்கித்தனம் பண்ண அவளுக்கு வராது. பதினெட்டு வயதும் ஒரு வயதா?

உள்ளே--

கோமதி வரவேற்கிறாள். அவளின் முகத்தில்தான் எத்தனைப் பொலிவு!

''குங்குமப் பொட்டின் மங்கலம்...'' ஒலிபெருக்கியில் சினிமாப் பாட்டொன்று கேட்கிறது. மாப்பிள்ளை பாலன் தன் தம்பியிடம் அதை நிறுத்தச் சொல்கிறான் மெதுவாக.

''இருங்கோ வாறன்'' கோமதி பக்கத்தறைக்குப் போகிறாள்.

''பாட்டை ஏன் நிற்பாட்டச் சொல்லுறீங்க'' சீதா.

''இது கோமதிக்கு எப்படி இருக்கும்? அதனால்தான்.... எனக்கென்னவோ கோமதியைப் பார்த்துக்கொண்டு இந்தச் சடங்குகளைச் செய்வது பிடிக்கவே இல்லை. அவள் நெற்றியில்....''

''பாவம்! அதனால் என்ன, அவள் முகமே குங்குமம் போலத்தான் இருக்கிறது எனக்கு''

சீதா இப்படி பாலனின் காதில் தாராளமாகக் கிசுகிசுப்பது அப்படி ஒன்றும் ஆச்சரியத்தைத் தரவில்லை. அவள் அவனது மாமன் மகள்தான். காதல் திருமணம் வேறு.

ஒரு சின்னத் தட்டத்தில் கற்பூரத்தை ஏந்திக் கொண்டு கோமதி வந்துவிட்டாள். தம்பதிகளுக்கு ஆராத்தி எடுக்கிறாள்.

கோமதியின் செய்கையை எவரும் தடுக்கவில்லை. அது பாவம்.

கோமதி அமைதியாகச் சிரிக்கிறாள். ''என் மனநிறைவுக்காகத்தான் சீதா....'' என்றபடி அவள் சந்தனத்தை எடுத்து பாலனுக்குப் பொட்டிடுகிறாள். 'தன்னையே அழித்து மணம் பரப்பும் பெண்ணா நீ' என அவன் நினைத்துக் கொள்கிறான். ''நான் வாசலுக்கு வரக்கூடாதில்லையா?'' என்கிற போது அவளின் வலது கை மோதிரவிரல் சீதாவுக்குத் திலகமிட்டு முடிக்கிறது.

கோமதிக்கும் பதினெட்டு வயதிலேதான் திருமணம் நடந்தது. இப்போது ஆண்டுகள் பலவாகி விட்டன.

நெற்றியில்தான் பொட்டில்லை.

அதைப் பார்க்கும் போதெல்லாம் சீதாவின் மனதில் துயரம் பாரமாய் உருளுகிறது. பாலனோ 'அண்ணா இருந்தால்' என்ற கற்பனையோடு பெருமூச்செறிகிறான். ''அண்ணி இருக்கும் போது விலகியே இருந்து கொள்வோம்'' என்கின்ற போது பாலனின் கண்களே பனிக்கின்றன.

உறவுமுறையை விட கோமதியும் சீதாவும் கல்லூரித் தோழிகள் என்ற பந்தம்தான் அதிகம். அந்த நாட்கள்தான் எவ்வளவு ரம்மியமானவை!

---

தமிழ்ச் சிறுகதைகளின் தரம் குறைந்து விட்டதாய்த் தோன்றுகிற இந்நாளில் பழைய பரணிலிருந்து சிறந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து வழங்குகிறது 'பரண்' பகுதி.

மு. கனகராசனின் 'சாளரங்கள்' பத்தாம்பசலித்தனச் சடங்குகளால் விளையக்கூடிய மீறல்களை படம்பிடிக்கிறது.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளுக்கும் அவளுக்கும்தான் எத்தனை ஒற்றுமை. கோமதிதான் எப்படித் துடிப்பான பெண்ணாயிருந்தாள்! அவளின் விஷமத்துக்கு ஆளாகாத ஒருத்தி இருந்திருக்க முடியுமா என்ன? கோமதிக்கு இயற்கையாகவே கற்பனை சிறிது அதிகம். அவள் எப்படி எல்லாம் எதிர்காலத்தைச் சிருஷ்டித்துப் பார்த்தாள்! அவளின் கேலியும் கிண்டலும் ..... அப்பப்பா!

அதையெல்லாம் நினைத்தால் ....? அந்தக் கோமதி இன்று இப்படி அமைதியாகிப் போனாளே!

ஒருநாள், கதையோடு கதையாக ''கோமதி! நீ மீண்டும் கல்யாணம் செய்துகொள்ளேன்'' என்றாள் சீதா.

''சீதா! அதை மட்டும் சொல்லாதே ப்ளீஸ்''

''எத்தனையோ பேர் அப்படிச் செய்யவில்லையா?''

''எனக்கு விருப்பமில்லை. நான் இப்படியே இருந்து விடுவேன்''

''உன்முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் ...?''

''நானென்ன கவலைப்பட்டுக் கொண்டா இருக்கிறேன்?'' கோமதி கலகலத்துச் சிரிக்கிறாள்.

''அத்தான்கூட உனக்காக எவ்வளவு கவலைப்படுகிறார் தெரியுமா?''

''பார்த்தாயா சீதா. இப்படியான அத்தான் இருக்கும் போது எனக்கென்ன கவலை?''

அந்த வீட்டில் சீதாவையும் கோமதியையும் எப்போதும் ஒன்றாகவேதான் பார்க்க முடிகிறது.

எந்த நேரமும் கூத்தும் கும்மாளமும் கொண்டாட்டமும் தான். தோழிகளல்லவா?

ஒருநாள் மாலை சீதா குளித்துவிட்டு வந்து கண்ணாடி முன் நிற்கிறாள். கோமதி பக்கத்தில் வருகிறாள்.

''இரு சீதா, நானே பவுடர் பூசி விடுகிறேன்'' கோமதி பவுடரை எடுத்து அவளின் கன்னங்களில் தடவுகிறாள்; ''என்னடி இவ்வளவு மெதுவாக இருக்கிறது?'' என்றவள் ''அத்தான் போட்டுவிட்டாலும் இப்படித்தானே தடவிவிடுவார்...'' என்றவாறு சீதாவின் சொக்கைகளை விரல்களால் நெருடி, அப்படியே கைகளைத் தாடையின் கீழாகக் கொணர்ந்து முகத்தை ஏந்திக் கண்களைப் பார்க்கிறாள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


சூரிச் மாநகரில் உங்களை அன்புடன் வரவேற்கின்றது

# தமிழரசி நகைமாடம்



* முத்துச் சங்கிலி
* தாலிக்கொடி
* ராசிக்கல் * மோதிரம்
* பதக்கம் * காப்பு
* சங்கிலி
* நவரத்தின மோதிரம்

இன்னும் ஏராளமான வகைகள்

NEUGASSE 58, 8005 ZURICH

Tel. 01/440 60 50, Fax : 01/440 60 52


''போடி'' இது சீதா. ஆனால் இதயமெல்லாம் சிலிர்க்கிறது. உண்மையாகவே பாலன் அப்படித்தான் செய்வான்.

கோமதி பொல்லாத போக்கிரிதான்.

கொக்கத் தடியால் முருங்கைக்காய் பறிக்கிறாள் சீதா. கோமதியோ ஓசைபடாமல் பின்னால் வந்து சீதாவின் சேலையும், ரவிக்கையும் மறைக்காத இடையைப் பற்றி, அவளின் உயர்த்திய கைக்கும் முகத்துக்கும் இடையே தன் முகத்தை வைக்கும் போது சீதா திடுக்கிட்டுப் போகிறாள்.

''என்ன? அத்தான் என்று நினைத்தாயா?''

''உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான்''

கோமதிக்கு எப்போதுமே இப்படி ஏதாவது குறும்பு செய்துகொண்டிருக்க வேண்டும். இப்படி ஏதாவது செய்ய வில்லையானால் அவளுக்குப் பொழுதே போகாது.

சீதா கிணற்றடியில் சேலைக்குச் சவர்க்காரம் போட்டுக்கொண்டிருந்தாள். மெதுவாக வருகிறாள் கோமதி. குனிந்திருக்கும் சீதாவின் பின்புறத்தில் 'பட்' டென்று ஓர் செல்லமான அடி விழுகிறது. அவள் சடுதியாகத் திரும்புகிறாள்.

''அவர் தான் இப்படித் தட்ட வேண்டுமாக்கும்?''

'அவர்' என்றதை அழுத்துகிறாள் கோமதி குறும்புடன்.

''உனக்கு'' என்ற சீதா எதுவும் சொல்லத் தோன்றாமல் தண்ணீரை அள்ளி எத்திவிட்டு ''போ'' என்கிறாள். ஆனால் உள்ளத்திலோ கற்பனையின் குறுகுறுப்பு.

'இவ்வளவு துருதுருத்தவள் ஏன்தான் இப்படி இருக்க வேண்டும்? பாவம். இவள் மனதை எப்படித்தான் மாற்றுவது?'

''சொக்கலேட் வேணுமா சீத்தா?'' என்றவாறு அதைச் சுற்றிய ஈயத்தாளை அகற்றியபடி வருகிறாள் கோமதி.

''எங்கே....?'' சீதா கை நீட்டுகிறாள்.

கோமதியோ அதைத்தன் வாயில் போட்டுக்கொண்டு ''இந்தா'' என உதட்டைப் பிதுக்குகிறாள்.

''இது அத்தான் பாணி'' என்றவள் சட்டெனச் சீதாவை இழுத்து அந்தச் சொக்கலேட்டைத் தன் உதடுகளிலே தேக்கி அவளின் வாயில் பொருத்துகிறாள்.

''நீ சுத்த மோசம்.''

''அத்தான் இப்படித் தானேடி ஊட்டுவார்?''

''போடி''

இரண்டாண்டுகள் கூட கோமதி இல்லறம் நடத்த வில்லை. அதற்குள் இந்த நிலை ஏற்பட்டு விட்டது. ஏன்தான் அவள்தன்னை இப்படி ஏமாற்றிக் கொள்கிறாளோ?

சீதா கால்நீட்டி அமர்ந்திருக்கிறாள். கோமதி அவளின் மடியிற் படுத்திருக்கிறாள். சீதா கோமதிக்குப் பேன் பார்த்துக் கொண்டிருக்கிறாள். தாவணி விலகிக் கிடக்க சீதாவின் அழகிய வயிறு கோமதியின் முகத்தில் பஞ்சுபோல அழுத்துகிறது. அவள் தன் விரல்களால் அங்கே கோடிடுகிறாள். சட்டெனச் சீதாவின் வயிற்றில் முத்தமிடுகிறாள்.

''உனக்கு இதே தொழிலாய்ப் போச்சு''

''ஏய்! அத்தான் ஒருமுறையாவது இப்படிச் செய்யவில்லை என்று சொல் பார்ப்போம்''.

''போடி''

மவுனம்.

''என்னடி இது; ஒரு செம்பட்டை மயிர்? இனி நரைக்கப் போகுது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போ.'' இது கோமதிதான்.

''உனக்குத்தான் நரைக்கும் போ'' சின்னப்பிள்ளையைப் போலச் சொல்கிறாள் சீதா.

கோமதி செய்வதெல்லாம் சீதாவுக்கு விளையாட்டுத்தான். எல்லாவற்றிற்கும் இடம் கொடுத்து விடுகிறாள். எதையுமே எதிர்க்கத் தெரியாது சீதாவுக்கு. எதற்கும் உடல்தான் மதமதர்த்துக் கிடக்கிறது.

தன் தலை நரைத்துவிடுமோ என்றெண்ண மனதிற்குச் சங்கடமாய் இருக்கிறது. ''உண்மையா கோமதி? நான் காணவில்லையே'' என்கிறாள்.

''கண்ணாடியில் பார் தெரியும்''

''அதைப்பிடுங்கித்தான் விடேன்.''

மயிரைப்பிடுங்கி விடுகிறாள். விரல்கள் சீதாவின் தலையிலேயே நிற்கின்றன. அவளின் உச்சியைக் கோமதியின் விரல்நுனி அழுத்தி நகத்தால் கீறி வருடி விளையாடுகின்றது.

''ம்! தெரியாதா? இப்படித்தானே நீயும் அத்தானுக்குச் செய்வாய்...?''

''எப்போ பார்த்தாலும் உனக்கு இது தான்.'' சீதா எழுந்து விடுகிறாள்.

தன் சினேகிதியும் பூரிப்போடு வாழ வேண்டுமென்று என்னென்னவெல்லாமோ செய்ய முயற்சிக்கின்றாள். எப்படியாவது கோமதியின் மனத்தை மாற்றி மணமுடித்து வையுங்களேன் என்கிறாள் பாலனிடம். அவனும் ''சரி பார்ப்போம்'' என்றான்.

அன்றுகூட அப்படித்தான்.

இருவரும் ஒன்றாகவே குளித்துக் கொண்டிருக்கிறார்கள். நெஞ்சுக்கு மேலே. பாவாடைகளை இறுக்கிக் கட்டிக் கொண்டு நனைகிறார்கள். கன்னிச் சதைக் கோலங்களுக்குத்தான். இவ்வளவு வசீகரம் எங்கிருந்து வருகிறதோ! பெண்ணைப் பெண்ணே மையல் கொள்ளும் கவர்ச்சி. கும்மாளத்துக்குக் குறைவில்லை.

''நேரம் போகுது. ஊத்தை பிரட்டிவிடு'' கோமதி தன் முதுகைத் தேய்க்கிறாள்.

பிறகு அவள் சீதாவுக்கு முதுகு தேய்க்கிறாள்.

''சரி விடு..'' எனச் சீதா நிமிர்கிற போது அவளை அப்படியே கட்டியணைத்து உதடுகளிலேயே கொஞ்சிவிடுகிறாள். சீதாவும் க்ஷணநேரம் ஸ்தம்பித்துத்தான் போகிறாள். ஈரம் சொட்டச் சொட்ட தண்ணீரை அள்ளி வார்த்துக் கொண்டு நிற்கும் இந்த நேரத்திலும் கூட உடல்




ஜேர்மனியில் குழந்தைகள் ஆறு வயது முடிந்தவுடன் கீழ்நிலைப்பள்ளி (Grand Schule) களில் சேர்க்கப்படுகிறார்கள். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஆர்வம் ஊட்டும் வண்ணம் முதல் நாளன்று 'Schultüte' என்கிற பரிசுக்கூடையைக் கொடுத்தனுப்புவது வழக்கம். இந்த கூம்புவடிவக் கூடைக்குள் இனிப்பு வகைகளும் சிறு விளையாட்டுப் பொருட்களும் இருக்கும். (இவ்விதழின் அட்டைப்படத்தைப் பாருங்கள்)

முதன் முதலில் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு இது மிக இனிமையான நினைவுகளை உருவாக்குகிறது. புதிய சூழ்நிலை குறித்த அச்சங்களையும், குழப்பங்களையும் தவிர்த்து பரிசுக்கூடைக்குள் என்ன இருக்கிறது என்கிற ஆர்வத்திலேயே அவர்களது மனம் லயிக்கிறது.

பல்லாண்டுகளாக ஜேர்மனியில் கடைபிடிக்கப்படும் இப்பழக்கத்தைப் போன்று வேறுநாடுகளில் இருக்கிறதா என்று தெரியவில்லை. இப்பழக்கத்தை நமது நாடுகளிலும் மேற்கொண்டால் என்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கனடாவில் உலக சைவப் பேரவையின் ஏழாம் அனைத்துலக சைவ மகாநாடு



கடந்த ஜுலை 30, 31 ஆகஸ்டு 1 ஆகிய நாட்களில் கனடா டொரொண்டோ நகரில் உலக சைவப் பேரவையின் 7ஆம் சைவ மகாநாடு இனிதே சிறப்புற நடந்தேறியது. ஏறக்குறைய 1000 பேர் கலந்து கொண்ட இம்மகாநாட்டில் இந்தியா, இலங்கை, மலேசியா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து உலக சைவப் பேரவையின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். டொரண்டோ நகர மேயர் இவ்விழாவினை சைவக் கொடியேற்றித் திறந்து வைத்தார். இம்மாநாட்டில் பல அரிய நூல்கள் வெளியீடு கண்டன. பேரூர் சாந்தலிங்க மடத்தைச் சார்ந்த சாந்தலிங்க ராமசாமி அடிகளார் இம்மாநாட்டில் அரிய சொற்பொழிவுகள் வழங்கி அருளினார். அத்தோடு உலக சைவப் பேரவையின் தலைவரும் மெய்கண்டார் ஆதீனகர்த்தருமான தவத்திரு சிவநந்தி அடிகள் மாநாட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தினார். அடுத்த உலக சைவ மகாநாடு 2001ஆம் ஆண்டு மொரிஷியஸ் நாட்டில் நடைபெறத் திட்டமிடப் பட்டுள்ளது.

எப்படியாகத் தகிக்கிறது!

சீதா உதடுகளைக் கடித்துக் கொள்கிறாள்.

''ம்! அத்தான் இப்படிச் செய்வார்தானே என்று கேட்கப் போகிறாயாக்கும்?''
கோமதியை முந்திக் கொள்ளும் அவள், ஒரு கிளுகிளுப்புடன் ''ஆமாம்! உனக்கு எப்படியடி தெரியும்? போக்கிரி'' என்கிறாள்.

விளையாட்டாகத்தான் கேட்கிறாள்.

அன்று சீதாவுக்குச் சுகமில்லை.

அதிகாலையில் பாலன் எழுந்துவந்து ஒரு யன்னல் பக்கத்தைத் திறந்து வாய் கொப்பளித்துத் துப்புகிறான். அருகில் இருக்கும் கண்ணாடி மேசையிலிருக்கும் சீப்பை எடுத்துத் தலையை வாருகின்றான்.

சீதா வெளியில்,

யன்னலுக்குள்ளேயிருக்கும் கணவனைப் பார்க்கிறாள்.

அங்கே கோப்பியைக் கொணர்ந்து வைக்கிறாள் கோமதி.

நித்திரை கொண்டெழுந்ததால் பாலனின் சுருள் சுருளான தலைமயிர் கட்டிப்பிடித்துக்கொண்டு கிடக்கின்றன.

சீதா யன்னலின் வெளியேயிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். சீப்பும், கணவனின் தலையும் படும் பாட்டைக் கண்டு அவளுக்குச் சிரிப்பாய் வருகிறது.

''என்னத்தான் சிக்குப் பிடித்துவிட்டதா? தலைக்குச் சோப்புப் போட்டால்தானே... அதுதானிப்படி'' என்கிறாள் அவள்.

அதைக்கேட்டு ''சிக்கு மட்டுமா? கையிலேயே ஒட்டிக் கொள்கிறமாதிரி வேறு பிசுபிசுக்கிறது'' என்று சட்டெனச் சொல்லிவிட்ட கோமதி தன் விரல்களை ஒன்றோடொன்று இணைத்து ஒட்டும் தன்மையையும் காட்டுகிறாள்.

''ஷெம்பு போட்டுக் குளியுங்கோ அத்தான்'' - கோமதிதான்.

பாலன் கோமதியை முறைக்கிறான்.

க்ஷண நேரம்தான்.

சீதா அவர்களை மாறிமாறிப் பார்க்கிறாள். இதுவரை ஒரு மனைவியைப் போல அவள் எந்தக் கேள்வியும் கேட்டதில்லை.

'கோமதிக்கு எப்படி அது தெரியும்?'

'அத்தான் ஏன் முறைக்கிறார்?'

''என்னமாய்ப் புழுங்குகிறது இந்த நேரத்திலும் ச்சு'' - என்றவாறு பாலன் யன்னலையும் திறந்துவிடுகிறான்.

''ஏன்? எப்படி?'' - ''ஏன்? எப்படி?'' - பெண்ணுக்கே உரித்தான கேள்விகள்.

அப்பாவி சீதாவின் முளையில் கேள்விகள் ஜனிக்க,

இன்றுதான்,

இல்லறத்தின் சாளரங்கள் திறந்து கொள்கின்றன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்று முடிச்சு படத்தில் நடித்துக் கொண்டிருந்த சமயம். இரவில் சாப்பிட்ட பின்னர் ஒன்பது மணிக்கு மேல் கைலியும் துண்டுமாக நாயுடன் வாக்கிங் செல்வது என் வழக்கம்.

அன்று வாக் போகும்போது அந்தப் படத்தை எடுக்கும் அமுதம் பிக்சர்ஸ் வழியாகச் சென்றேன். யாராவது இருந்தால் பார்த்து சிறிது நேரம் பேசலாமே என்ற எண்ணத்துடன் நாயை வெளியே விட்டுவிட்டு எப்போதும் போல நான் உள்ளே நுழைந்து ரிசப்ஷன் அறையில் இருந்த சோபாவில் அமர்ந்தேன்.

அறைக்குள் வந்த நபரிடம் ''வத்திப் பெட்டி இருந்தா கொஞ்சம் கொடுங்கள்'' என்றேன்.

என் தோற்றத்தைப் பார்த்த அந்த நபர் ''நீ யாருப்பா? முதலில் எழுந்திரு. நீ பாட்டுக்கு உள்ளே நுழைஞ்சதுமில்லாம அதிகாரமா தீப்பெட்டி கேக்குறியே?'' என்றார் அதட்டலுடன். நான் கறுப்பு, கைலியும் சற்று அழுக்கடைந்த துண்டுமாக வேறு இருந்தேன்.

அந்த நபர் எனக்குப் பரிச்சயம் இல்லாதவர். நான் அவரிடம் அந்தக் கம்பெனி தயாரிக்கும் படத்தில் நடிப்பவன் என்று கூறி, ''முதலாளி வெங்கட்ராமன் இல்லையா?'' என்று கேட்டேன்.

''அவங்களெல்லாம் யாருமில்லை... ஊருக்குப் போயிருக்காங்க. நான் அவருக்கு உறவு. கோயம்புத்தூர்காரன். உன்னை எனக்குத் தெரியாது. முதலில் இடத்தைக் காலிசெய்யப்பா'' என்றார் இளக்காரமாக என்னைப் பார்த்தபடி.

அதற்குள் அழகான என் பொமரேனியன் நாய் உள்ளே நுழையவே, ''நாய் யாருதுப்பா?'' என்றார் எரிச்சலுடன்.

நான் வளர்க்கும் நாய்தான் அது என்று கூறியதும் ''அப்படியா?'' என்று குழைந்தவர் வேகமாக உள்ளே சென்று தீப்பெட்டி எடுத்து வந்து கொடுத்து பலமாக உபசரிக்கத் தொடங்கிவிட்டார்.

உயர்ந்த சாதி நாயைப் பார்த்ததும்தான் என்னை நம்ப முடிந்தது அவரால். ஐந்தறிவு படைத்த நாயை வைத்து ஆறறிவு படைத்த என் நிலை உயர்ந்ததைக் கண்டு மனதுக்குள் சிரித்துக் கொண்டேன். நாய்க்கு நன்றி சொன்னேன். ●

**13.4.78 குமுதம் இதழில் ரஜினிகாந்த்.**

**கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்**

**GUARDIAN ASSOCITION FOR PERSONS ARRESTED AND DISAPPEARED (GAPAD)**

342 Stanley Road, Jaffna, Srilanka Regd. No. J/DS/SSO/2/97

Bank of Ceylon, Jaffna Second Branch, Stanly Road, Jaffna

Account No. 12021 C

**STANDING ORDER**

To: The Manager,

Please make monthly transfers on the same day to each month to GAPAD 's account No.
Until this order is cancelled by me/us.

Name:............................................................Address:.........................................................................................

............................................................................Signature.........................................................Date.......................

Please debit my /our Account No..........................Amount of.............In words(.................................)

**மேல் படிவத்தை நிரப்பி கையொப்பமிட்டு தங்களின் வங்கியில் கொடுப்பதன் மூலம் ஒரு நிரந்தரமான மகத்தான பணிக்கு பேருதவி புரிகின்றீர்கள். நன்றி.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெஞ்சை நெகிழ்த்திய நெஞ்சங்கள்

**ஸ்ரீபதி சிவனடியான்**

இருபத்தி இரண்டு வருடங்களுக்கு முன்பு (1977) பிராங்பேர்ட் மாநகரில் கலைமாமணி யேசுதாஸ் அவர்களின் கலை நிகழ்ச்சி ஒன்றை நண்பர் ஒருவருடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்தேன். அந்த விழாவில் இந்திய, தமிழீழ மக்கள் பலரும் வருகை தந்திருந்தனர்.

அன்றைய நாளிலிருந்து நட்பு என்னும் எல்லையைத் தாண்டி என் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் அண்ணர் குமாரும், அக்கா இந்திராவும்.

அந்த இசை நிகழ்ச்சியில் சுகமான ராகங்கள் இதமாக நெஞ்சை வருடியபோது இவர்கள் என்னோடு நெருங்கிப் பழகிய நினைவுகள் இன்னமும் பசுமையாகப் பதிந்து இருக்கின்றன. அன்னையை இளவயதில் இழந்து, ஐந்து சகோதரிகளுடன் குடும்பத்தின் சுமைகளைத் தாங்கிக் கொண்டு காயங்கள் பல பட்டு முன்னேறிய நினைவுகள் நெஞ்சை வருடுகிற போதெல்லாம் என் இதயத்திற்குள் இந்தத் தம்பதிகள் இழையோடத் தவறுவதில்லை. எந்தப் பிரச்சினைகள் எதிர்நோக்கினாலும் எனக்கு நல்ல ஆலோசனைகள் மூலம் ஆறுதல் தந்து என்னை வாழ வைக்கிற மனித நேயமிக்க இந்த இதயங்களை என்றுமே என்னால் மறக்கமுடியாது.



*நிலைத்து நிற்கும் நினைவுகள் விழாவில் பார்வையாளர்களாக குமாரசாமி தம்பதிகள் அருகில் திருமதி ஸ்ரீமீரா சரவணபவன் (பிறேமன்)*



*பி.சுசீலாவின் குரலில் பாடும் டாக்டர் இந்திரா குமாரசாமி. அருகில் சங்கீத பூசணம் திருமதி அபிராமன்.*

குமாரசாமி ஓர் என்ஜினியர். இந்திரா, மருத்துவ டாக்டர். இதமான அவர்களின் அன்பும் ஆதரவும் என் மனதினிலே சுகமான நிறைவைத் தந்து இயக்கும் 'டானிக்'. அண்மையில் அவர்கள் இல்லத்திற்குச் சென்றிருந்தபோது நாவிற்கினிய இரவு உணவை அருந்திவிட்டு வரவேற்பறையில் அமர்ந்து பேச ஆரம்பித்தோம். விடியற்காலை இரண்டு மணியாகியும் நேரம் போனதே தெரியவில்லை.அவர்களின் இரு பிள்ளைகள் வித்தியா, அருண் ஆகியோர் அமெரிக்கா சென்று உயர்நிலைப் பள்ளியில் படித்துவிட்டு வந்த விடயம்தான் எங்களால் பெரிதும் பேசப்பட்டது. தொடரும் இவ் விடயம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் செல்வப் பிள்ளைகளுக்கு நிச்சயமாக பேருதவி புரியும் என்ற வகையில் வித்தியா, அருண் இருவரும் இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கின்றனர். அந்நிய நாட்டில் அரிய சந்தர்ப்பத்தை அடையத் தவறாதவர்கள் அவர்கள். **'அமெரிக்கா அழைக்கிறது . . .'** கட்டுரையை கவனமாகக் கருத்தில் கொண்டு, இளம் தமிழ் சந்ததிக்கு உதவ இரங்கும் இல்லத்தின் விலாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உதவக் காத்திருக்கிறது இரங்கும் இல்லம். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் வெளியீட்டு விழா

# எனக்காகப் பூக்கும்!

கடந்த 3.7.99 மாலை பாரிஸ் முத்து மாரியம்மன் கோவில் தமிழ்ச்சோலை மண்டபத்தில் 'எனக்காகப் பூக்கும்' நூல் வெளியீட்டு விழா சிறப்புடன் நடந்தேறியது. இவ்விழாவில் முக்கியச் சிறப்பு என்னவென்றால் பத்திரிகைத் துறையில் நீண்ட கால அனுபவம் வாய்ந்த இருவர் இவ்விழாவை நடத்தி வைத்ததுதான். யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையில் உதவியாசிரியராகவும், புலம்பெயர்ந்த நாட்டில் 'தமிழன்' ஆசிரியராகவும் இலக்கியப் பணி செய்த திரு.எஸ்.கே.காசிலிங்கம் விழாத் தலைவராக நூலை ஆய்ந்து உரையாற்றிச் சிறப்பித்தார். யாழ்ப்பாண 'ஈழநாடு' இதழில் பணியாற்றியவரும், புலம்பெயர் மண்ணில் பாரிஸ் 'ஈழநாடு' இதழின் ஆசிரியருமான திரு.கந்தசாமி நூலாசிரியரின் அழகுணர்ச்சியை பாராட்டிப் பேசி நூலை வெளியிட்டார்.



*முதல் புத்தகத்தைப் பெறும் தொழில் அதிபர் திரு.குமார்*



*இடமிருந்து வலமாக ஈழநாடு இணை ஆசிரியர் கந்தசாமி, அப்புக்குட்டி ராஜகோபால், ரகுநாதன், தமிழன் ஆசிரியர் எஸ்.கே.காசிலிங்கம், ஜே.ராசநாயகம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐரோப்பாவில் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் நிறைந்த மனதுடன் ஆதரித்து கலை இலக்கியத்தை வளர்ப்பதில் முன்னிற்கும் குமார்ஸ் தாபனங்களின் முகாமையாளர் திரு.சந்திரகுமார் முதல்பிரதியைப் பெற்றுச் சிறப்பித்தார்.

நூலை வெளியிட்ட திரு.கந்தசாமி குறிப்பிட்டது போல் இந்நூலாசிரியரின் பல முகங்களில் இது ஒரு புதுமுகம். ஐம்பத்தி இரண்டு ஆண்டுகளாக வானொலி நாடக, திரைப்பட, சின்னத்திரை நடிகராக, இயக்குநராக, தயாரிப்பாளராக, ஒப்பனையாளராக, நாடகாசிரியராக, விமர்சகராக தன்னை முன்னிலைப்படுத்தி வந்த ஈழத்தின் மூத்த கலைஞர் **ஏ.ரகுநாதன்** கவித்துவமான தலைப்பில் **'சந்துவி'** என்ற தன் புனைப்பெயரில் எழுதிய குறுநாவல்தான் எனக்காகப் பூக்கும்.

ரகுநாதனுடன் நீண்ட காலமாகப் பணியாற்றிய பெரும் கலைஞர்கள் பெஞ்சமின் இமானுவேலும், அப்புக்குட்டி ராஜகோபாலும் விளக்கேற்றி வைக்க ஆரம்பமான இவ்விழாவிற்கு மூத்த கலைஞர் முகத்தார் ஜேசுரட்ணம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு.இளங்கோ, கவிஞர் அமீன், இராஜகுமாரன் (ஜேர்மனி), மௌனம் சின்னத் திரைப்படத் தயாரிப்பாளரும், சர்வதேச தமிழ்க் கலைஞர்கள், அறிஞர்கள் இணைப்பகத்தின் தலைவருமான இன்ஜினியர் ஜே.ராசாநாயகம், முகத்தார் வீடு சின்னத்திரைப்படத் தயாரிப்பாளரும், சிறந்த நடிகருமாகிய இரா.குணபாலன், 'சத்திய கீதை', 'தீ' போன்ற சின்னத்திரைப்படங்களின் நெறியாளரும், எழுத்தாளருமான கீழ்க்கரவை பொன்னையன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ராசநாயகம் தனது உரையில் ரகுநாதனின் கலைச்சேவையை புகழ்ந்து பாராட்டினார். ரகுநாதன் ஒரு பல்கலை வேந்தன் என்றும் சிறப்பித்துக்கூறினார். பட்டம் பெறுபவர்களும், பட்டம் கொடுப்பவர்களும் எந்தத் துறையிலிருந்தாலும் நல்ல தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அது கயிறறுந்த பட்டமாக ஆகிவிடும் என்று ராசநாயகம் குறிப்பிட்டுக் காட்டினார்.



பார்வையாளர்களில் ஒரு பகுதி . . .

ரகுநாதன் தன் ஏற்புரையில், புலம்பெயர்ந்த மண்ணில் தனது படங்களை இயக்கித் தந்த எஸ்.கே.ராஜன், ராசநாயகம் ஆகியோருக்கு நன்றி கூறி ஒரு வித்தியாசமான உரையையும் ஆற்றினார்.

ஒரு துறையில் மிக அற்புதமான சாதனை புரிந்து ஓய்வு பெறும் ஒரு சாதனையாளர்தான் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவேண்டுமென்றும், தான் அப்படி பெரிய சாதனை எதுவும் படைத்துவிடவில்லை என்றும், இன்னமும் ஓய்வு பெறாத தான் நிச்சயம் எதிர்காலத்தில் பலரும் பாராட்டும் விதமாக சின்னத்திரையிலும், எழுத்துலகிலும் சிறப்பாக படைப்புகளைத் தருவேன் என்றும் தன்னடக்கத்துடன் பேசினார் ரகுநாதன். மேலும் அவர் பேசுகையில், ஒவ்வொரு கலைஞனும் சுயவிமர்சனம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தன் மனத்திருப்திக்கான படைப்பை இன்னமும் தான் தரவில்லை என்றும், அப்படிச் சாதித்த பின்னர்தான் பட்டத்தையோ, பொன்னாடையையோ ஏற்றுக் கொள்வேன் என்றும் அவர் பணிவுடன் குறிப்பிட்டது நிறைகுடம் தளும்பாது என்பதை எடுத்துக்காட்டியது.

திரு.அமீன், திரு.கணேஷ் இருவரும் கவிதை வாசித்து அளித்து தங்களின் பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார்கள். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரவி தமிழ்வாணன் பாராட்டுகிறார்...



ரவி தமிழ்வாணனுடன் செல்வி சசி, ஸ்ரீபதி

'உன் அனுபவங்களைச் சொல். அதுதான் வேதாந்தம்!'

'Tell your experience, that is philosophy'

என என் தந்தை தமிழ்வாணன் அடிக்கடி சொல்வார். நம் அனுபவங்களை அதிகப்படுத்துவது பெரும்பாலும் பயணங்கள்தாம்! அவை உள்நாட்டுப் பயணமாக இருந்தாலும் சரி, வெளிநாடாக இருந்தாலும் சரி!

எனவே, இந்த இதழுக்கு பயணம் என்றே பெயர் வைத்து புதுமையான முயற்சியை மேற்கொண்டுள்ள திரு. ஸ்ரீபதி சிவனடியான் பெரிதும் பாராட்டுக்குரியவர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்லாது அனைத்துத் தமிழர்களுக்கும் பயன்படும் வகையில் இந்த இதழை சென்னையிலேயே அச்சடித்து, பல்வேறு விநியோக முயற்சிகளை மேற்கொள்வது சிறப்பானது. பத்திரிகைகளை த் துவங்கி நடத்தி லாபம் சம்பாதிப்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை பதிப்பக உலகில் உள்ள என்னால் மற்றவர்களை விட நன்கு உணரமுடியும். இருப்பினும் ஓர் உயரிய குறிக்கோளுடன் லாப நோக்கில்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் ஈழத் தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக செயல்பட வேண்டுமென்ற காரணத்துடன் துவங்கப்பட்டிருக்கும் இந்த இதழை நாம் அனைவரும் வாங்கி ஆதரவு நல்கவேண்டியது நம் கடமை.

பரந்து பட்ட பார்வையைப் பெற உதவும் பயணம் இதழில் நிறைய சுவையான விஷயங்கள் இடம்பெறுகின்றன. ஆசிரியர் குழுவினரும் பாராட்டுக்குரியவர்கள்.

பயணங்கள் முடிவதில்லை . . . பயணம் இதழும் தொடர்ந்து வெற்றியும் சிறப்புகளும் எட்டுவதற்கு என் மனமுவந்த வாழ்த்துக்கள்.

ரவி தமிழ்வாணன், மணிமேகலை பிரசுரம், சென்னை.



18.08.99 இல் சென்னையில்
மணவிழா கண்ட

**சந்திரலிங்கம் சிவசந்திரன்**
(கனடா)

**சிவலோகநாதன் சிவதர்ஷினி**
(சென்னை)

இனிய இல்லறம் காண
'பயண'த்தின் வாழ்த்துக்கள்!

ஆசிரியர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலண்டனில் முதலாவது
தமிழர் நகை மாளிகை

# Western Jewellers

**Jewellers & Gem Merchants**

புத்தம் புதிய டிசைனில் அசல் 22 கரட் தங்க
நகைகளை நீங்கள் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய இடம்

## வெஸ்டன் ஜுவலர்ஸ்

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

230, UPPER TOOTING ROAD, TOOTING, LONDON SW17 7EW
TEL: 00 44 181 767 3445
FAX : 00 44 181 767 3753
web : http://www.luxmi.com/western

ஆலோசனை ஆர்வம் ஆற்றல்
கொண்ட சிந்தனையுடன் வெவ்வேறு
நாடுகளில் வாழ்ந்து கொண்டு சேவை செய்து
வரும் நம்மவர்களில் பலருக்கு நன்மை செய்து
நன்றி கூறி நட்பை வளர்க்க
**கடல் கடந்த கலைப் பயணம்**
பாடுபட வாழ்த்துக்கள்

# BP-Station

International Airport
Terminal 1, 60549 Frankfurt
Germany

www.tamilarangam.net

PAYANAM MONTHLY 1999



மகள் வித்தியாவுடன்
டாக்டர் இந்திராகுமாரசாமி

இந்த இதழில் . . .

ரவிதமிழ்வாணன் எழுதுகிறார்!

# ஒரு பதிப்பாளனின் பயண அனுபவங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்